Reg. No. M.-1436.

க்ஷத்திரிய மித்திரன்.

(மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.)

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—(திருக்குறள்.)

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

ஆரும் வால்யம்.

1925

த. விஜயதுரைசாமி கிராமணி,

பத்திராதிபர்,

தண்டையார்பேட்டை, சென்னை.

"க்ஷத்திரிய மித்திரன்"—வருடச் சந்தா உள்நாடுகளுக்கு ரூபா 3. வெளிநாடுகளுக்கு ரூ. 4.

வேண்டுகோள்.

(கி. மு. ம. மரிய அந்தோணி நாடார், வடக்கன்குளம்.)

நமது குலநலத்தைக் கோரி உழைத்துவரும் "க்ஷத்திரிய மித்திரன்" என்னும் நமது குலப்பத்திரிகை, நம்குலத்திற்கு ஒரு காவலனா யிருக்கிறா னென்பது நம்மெல்லோருக்குந் தெரிந்த விஷயமாகும்.

அவனால் இந்த சொற்ப ஆறுவருட காலத்தில் ஏற்பட்ட நன்மைகள் பலவாகும். அவற்றுள் ஒன்று கள்தொழில் நம் குலத்தொழில் அல்லவென பல நூற்களின் ஆதரவைக்கொண்டு தெரிவித்தவனும் அவனே! நம் சாதிவிஷயமாக தகுந்த சமாதானம் எழுதும் ஆற்றலை நமக்குக் கற்பித்தவனும் அவனே! இன்னும் பல. அத்தகைய காவலன் நம் குலத்திற்கு ஒருவன் இருத்தல் வேண்டுமென வெண்ணி, அக் காவலனுக்கு வருடத்திற்கு மூன்று ரூபாய் சம்பளமாகக் கொடுத்து உதவி போஷித்து வருதல் நமது கடைமைகளில் ஒன்றாகும்.

உங்களது பலவித சோலியால் அதைப் படிக்க உங்களுக்கு சந்தர்ப்பம் வாய்க்காம லிருக்கக்கூடும் என்றாலும் குல அபிமானங்கொண்டு வீணாகக் கழிக்கின்ற சில நேரத்தை அவன்மீது பிரயோகிப்பீர்களென நம்புகிறோம். உங்களுக்குரிய குல தருமங்களில் இதுவும் ஒன்றெனக் கொண்டு நமது மித்திரனை ஆதரித்து ரூபாய் மூன்று மணியாடர் செய்யுமாறு வேண்டுகின்றோம். அல்லது வி. பி. யில் அனுப்பும் படியாவது எழுதக் கோருகின்றோம். உங்களது உதவியாலேயே நிலை நிற்கவேண்டும். ஆகவே அப்பேருதவியையே எதிர் பார்க்கின்றனம்.

க்ஷத்திரியகுல விளக்கம்.

சூரிய சந்திரகுல க்ஷத்திரிய சிகாமணிகாள்!

இம்மகுடம் புனைந்த நூலில் நம் குலத்தவர் பூர்வம் இத்திராவிட தேசத்தைப் பரிபாலித்து வந்த சூரிய சந்திரகுலத்திலுதித்த சேர சோழ பாண்டிய வம்ஸத்தில் வந்த க்ஷத்திரிய குலத்தவர் என "கிரந்தம், தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ்" ஆகிய பாஷா நூற்களின் ஆதரவுகளைக் கொண்டு நன்கு விளக்கி எழுதப்பட்டுள்ளது. இது 300-பக்கங்கள் கொண்டு டிம்மி உயர்ந்த 20-பவுன் கிளேஸ் கடிதத்தில் 8-பக்க சைஸில் அச்சிடப்பட்டிருக்கின்றது. கொஞ்சம் காப்பிகளே கையிருப்பு.

இதன விலை தபால் சார்ஜ் உள்பட ரூபா 1—8—0

க்ஷத்திரிய மித்திரன் ஆபீஸ்,

தண்டையார் பேட்டை, சென்னை.

பொருளடக்கம்.

1.	தெய்வ வழிபாடு	1
	அமிழ்தினுமினிய தமிழ்மொழியின் மாண்பு ...	29, 37
3.	அலரி ஓர் விஷப்பூண்டு	62
4.	அயோக்கியப் பிணத்தல்	127
5.	அர்த்தனரீச வர்மாவுக்கு எச்சரிக்கை	214
6.	அகராதி நன்கொடை	223
7.	ஆத்திச்சூடி அதிசய விகடம்	196
7a.	ஆரோக்யமும், அழகும்	329
8.	ஆன்ம விசாரம்	167
9.	இலக்கியப்பகுதி	19
10.	இரு சிலாசாஸனம்	95
11.	இளைஞர்களுக்கோர் விண்ணப்பம்	108
12.	இந்து தேவஸ்தான தர்மபரிபாலன சட்டம் ...	157
12a.	இந்துமதத்தில் ஸ்திரீகளின் நிலைமை	327
13.	இராஜபுத்திர ஸ்தானம்	294
13a.	இனி எந்தவிதமாய் நாம் மேன்மையடையலாம் ...	334
14.	இந்து தேவஸ்தான பரிபாலன மசோதா	125
15.	இந்து மகாசபை	239
16.	உயிர்வதை நீத்தல் வினாவும் விடையும்	115
17.	ஊர்த்துவ புண்டரம்	226
18.	ஓர் கட்டுரை	83
19.	ஓர் நன்மதி	93
20.	ஓர் சாசனம்	165
21.	கலகத்தா விர்த்தாந்தம்	46
22.	கதிதவறுமை	94
23.	கடவுளை அடையும் மார்க்கம்	310, 317
24.	கிராம பஞ்சாயத்து எலெக்ஷன்	183
25.	கிராமப் பஞ்சாயத்து	225
26.	குறும்பர்குல ஆராய்ச்சி	11, 79
27.	குழந்தைகளை போஷிப்பது	49
28.	குறும்பர் வன்னியர் என்பதின் வரலாறு	106
29.	குறுநில மன்னர் குலம்	121
30.	குடியன் குடிமயக்கம்	194
30a.	குடியிருக்கும் வீடே கோட்டை	343
31.	கேள்விக்கு சமாதானமும், அதற்குமேல் கேள்வியும் ...	24, 45, 87
32.	கைத்தொழில் வன்மை	50
33.	கைம்பெண்களுக்கு மறுமணம் அவைதிக மென்பது ...	215
34.	கோயில் பிரவேசம்	149
35.	கோத்திரப் பெருமை	222

36. சந்தியா வந்தன விதி 41
36a. சக்ரவர்த்தி நெப்போலியன் 320
37. சடகோபர் என்கிற நம்மாழ்வார் ... 255, 288, 322
37a. சண்டையிற் தோற்றவரசர்கள் படும்பாடு 338
38. ஷகந்தரும், ஹிண்டிமகவியும் 202
39. சான்றார் குலத்து ஆசாரங்கள் 210
40. சாஸனப்பத்திரம் 252
41. சான்றோர்குல ஆராய்ச்சி 1
42. சிக்கெனச் செலவு 100
43. சிலாசாஸனம் 117
44. சிலாசாஸனத் துண்டுகள் 136, 148
45. சில்லறைக் கோர்வைகள் 166
46. ஜீவகாருண்யம் 176, 238, 301
47. செய்கடனும், சுகானுபவமும் 283
48. சேலம் க்ஷத்திரியனில் ஓர் கடிதம் 218
48a. சேதுபதி பரம்பரை 336
49. சேலம் க்ஷத்திரியன் பத்திராதிபருக்கோர் பகிரங்கக் கடிதம் 28
50. சேலம் க்ஷத்திரியனும், நாடார் பட்டமும் 38
51. ஸ்திரீ வைத்தியர்கள் 287
52. தர்மஸாஸ்திரம் 110
53. தமிழரின் சிறப்பு 158
53a. தன் பொறுப்பு 340
54. திருப்போரூர் தேவஸ்தான விஷயம் 73
55. திருப்போரூர் மடாதிபதிகள் கிராமணிகளுக்கு எழுதிக்கொடுத்த
உடன் படிக்கை 56
56. தியாகராய செட்டியார் மரணம் 224
57. திருவள்ளுவனார் வரலாறு 113, 133
58. துர்க்கை அரசகுல தெய்வம் 300
59. தென்தமிழ்த் தனிமாட்சி 253
60. தொண்டமண்டலச் சான்றோர் தருமபரிபாலன மகா சபை 180
61. நகரமும், நகரத்திற்கு வேண்டிய வெளியிடங்களும் ... 249
62. நடுநிலைமை 60, 126
63. நயனியப்ப கிராமணியார் மரணம் 52
64. நமது குலத்தவர் 85
65. நாம் செய்யவேண்டிய விதிகள் 299
66. நாடார் மகாஜன சங்கம், மதுரை ... 231, 304, 330
67. நாடகம் 104
68. நாடார் மகாஜன சங்கம், 9-வது கான்பரன்ஸ், மதுரை ... 7, 33, 65
69. நாடார் மகாஜன சங்கம், 10-வது கான்பரன்ஸ், மதுரை ... 257
70. நாடார் குலாபிமானிகளுக்கோர் வேண்டுகோள் ... 86
71. நாடார் என்னும் சொல்லாராய்ச்சி அரங்கேற்ற நிதி ... 87

72. பந்தயம் ஆயிரம் ரூபாயாம் 10
73a. பர்மாவைப்பற்றிய இரகசியங்களும், அதிசயங்களும் ... 331
73. பல்லவரா? கள்ளரா? 144
74. பழனியப்ப நாடார் அகால மரணம் 163
74a. பழக்க வழக்கங்கள் 341
75. பச்சோந்தியின் பகட்டு 175
76. பார்ஸிகளின் குலவொழுக்கச் சட்டம் 190
77. பாண்டியநாடும், நாயக்க அரசர்களும் 97, 169, 201, 229, 281, 313
78. பிரசித்த பெண்மணிகள் 127
79. புருஷோத்தமன் அல்லது யாதவ அன்றில் ...118, 140, 184, 220, 243
80. புண்டரம் தரித்தல் 77
81. புண்டரதாரணம் 101, 155, 181
82. புதுக்கோட்டை அரசர்கள் பல்லவரா? 147
83. பெண்கல்வி 216
84. பைபிள் மாமிச பட்சணம் 212, 246
85. போலீஷ் கோர்ட்டும், திருஞான சம்பந்த செட்டியும் ... 52
86. மந்திரம் 163
87. மலையாள மேல்சிலை போடல் 161
88. மாமிச பட்சணம் 96
89. மீனாட்சிசுந்தர கிராமணிக்கு டிபார்ட்டி 189
90. முக்கியக் குறிப்பு 92, 109, 136
91. மூப்புவராமல் காப்பது 207
92. யோகம் 72
93. யோசேப்பு நாடாரவர்களின் வேற்றிப்பத்து ... 31
94. லண்டன் நகரின் பெருமை 58
95. வன்னியர் என்னுஞ் சொல்லின் ஆராய்ச்சி 182
96. வடக்கன்குளமும், பூர்வீக நாடார்களும் 195
96a. வாலிப நாடார் சங்கம், கும்பகோணம் 325, 335
97. விக்கிர காராதனம் ... 173, 231, 292
98. விக்கலுக்கு மருந்து 303
99. விடிந்துந் தூக்கமா 86
100. விதவாவிவாகம் 187
101. வித்யாபி விர்த்திசங்கம், கமுதி 44
102. விஜயரத்தினசாமி நாடார்மீது வாழ்த்துப்பா ... 55
103. வேட்டைக்காரப் பள்ளியின் வீண்புரளி ... 228
104. வேண்டுகோள் 309
105. வேதவிசாரம் 233

☞ க்ஷத்திரியன்.

தபால் சார்ஜ் உள்பட இரண்டரை அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

ஸ்ரீ வெற்றிவேல் நிர்த்தன விலாஸ,

கௌமார நாடி ஜோதிடசாலை.

1. இது எங்கள் முன்னோர்கள் காலந்தொட்டு பரம்பரையாய் கையாண்டுவந்த ஓலைப் புத்தகங்கள் சுமார் 3000000 ஜாதகங்களுக்குமட்டும் சுருதிகள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் தங்கள்தங்கள் ஜாதகத்திற்குரிய பலன்களை நேரில் பார்த்துக்கொண்டபின் உண்மைகளை யறிந்து அனுபவத்திற் காணலாம்.

2. இதில் கிரகங்களின் இராசிசக்கரம், ஆதியாக வருடம், மாசம், தேதி, நாள், நட்சத்திரம், நாழிகை, விநாடி, ஊர், வீதி, வீடு, வாசல், சூல், ஜாதி, மதம், பெயர், தந்தைவழி, தாய்வழி, தாய்தந்தையர், ஜன்மகாலம், அவர்கள் பெயர், பாட்டன் காலநிலைமை, தகப்பன்கால நிலைமை, தன்காலநிலைமை, தாய்தந்தையர், சகோதரம், ஆண்பெண் மொத்தம் இருப்பு, கடைகால நிலைப்பு, தன்னுடைய சகோதரம், ஆண், பெண், மொத்த உதிப்பு, மத்திமகாலத்தில் நிலைக்கக்கூடியவை முடிவுகாலதீர்க்கம், விவாககாலம், மனைவிபெயர், புத்திரபாகம், ஆண்பெண் முடிவு காலத் தீர்க்கம், தொழில், கண்டகாலம், தோஷம் தோஷநிவாரணம் முன்பின் ஜென்மம் ஆயுள் வினை அப்போதைக்கப்போது ஆகும் காலபலன்களை திசாபுக்தியாகவோ கோசாரரீதியாகவோ விளக்குவதுடன் இதில் சொல்லாத அனந்த விசேடபலன்களையும் அவாளவாள் போகபாகத்துக்கு தக்கபடி விரிவாகவும் தெளிவாகவும் விளக்கியுள்ளன. ஜாதகம் ஒன்றுக்கு சார்ஜ்ரூ20-0-0

3. ஒவ்வொரு ஜாதகங்களுக்கும் முதலில் அட்வான்ஸாக ரூபாய் 10 முன்னதாக கட்டவேண்டும். முதற்பாகம் கிடைத்தவுடன் மிச்சம் ரூபாய் பத்தும் கொடுத்தபிறகுதான் மேற்பாகம் தேடப்படும். எழுத்துக்கூலி ரூபாய் ஒன்றும் நோட்டுப் புஸ்தகமும் பிரத்தியேகமாக கொடுக்கவேண்டும். மற்ற விபரங்கள் நேரில் தெரியலாம்.

4. இரேகைசாஸ்திரம் ஒன்றைத்தவிர மற்றவைகளுக்கு அவாளவாள் ஜென்மகால ஜாதகச்சக்கரம் கொடுக்கவேண்டும். இரேகைசாஸ்திரத்திற்கு அட்வான்ஸ் ரூபாய் 7 முன்னதாக கட்டவேண்டும். முதற்காண்டம் கிடைத்தவுடன் பாக்கி ரூபாய் எட்டும் கட்டவேண்டும்.

☞ எமது விலாசம்:—

செ. தங்கவேல் நாடார்,

கௌமார ஜோதிடசாலைத் தலைவர்,

வடிவாய்க்கால்தெரு, மாகாமகக்குளம், கும்பகோணம்.

மதிப்புரை.

குமரன்.

என்னும் மிக்க அருமையான மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை ஒன்று காரைக்குடியில் நான்கு வருடமாக நடைபெற்று வருகின்றது. மிக்க விலையுயர்ந்த கிளேஸ் கடிதாசியில் நல்ல பதிப்பில் சுத்தமாய் பதிப்பிக்கப்பட்டு, ஸ்ரீமான், சோ. முருகப்ப செட்டியார் அவர்களால் தெள்ளிய இனிய எளிமைவாய்ந்த செந்தமிழ் நடையில் கற்றோரை வசீகரிக்குமாறு எழுதப்பட்டு வருகின்றது. இது எவரும் வாசிக்கச் சிறப்புடைத்து. வருடச்சந்தா உள்நாட்டுக்கு ரூபா மூன்றும், வெளிநாட்டுக்கு ரூபா மூன்றரையுமாகும். காரைக்குடி குமரன் அச்சுக்கூடத்தில் பெற்றுக் கொள்ளலாம.

(பத்திராதிபர்.)

க்ஷத்திரிய மித்திரன் பாதுகாப்பு நிதி.

இலங்கை வசூல்.

இரக்ஷக கனவான்கள்.

ஸ்ரீ இந்திய க்ஷத்திரியகுல நாடார் சங்கம், இலங்கை.
ஸ்ரீமான், ரு. அ. முத்து நாடார் அவர்கள் "நாடார்குல மித்திரன்"
பத்திராதிபர், அருப்புக்கோட்டை.
மெஸர்ஸ், சி. பொ. ம. பொன்னைய நாடார் & பிரதர்ஸ், வாழையடி.
மெஸர்ஸ், ம. து. தா. துரைசாமி நாடார் & பிரதர்ஸ், சுண்டன்கோட்டை.
ஸ்ரீமான், ரா. ம. ஆ. ஆறுமுக நாடார் அவர்கள், சிறுநாடார் குடியிருப்பு.
மெஸர்ஸ், சு. ந. மா. நா. ரா. நாராயண நாடார் & Co., கொளம்பு.
ஸ்ரீமான், வே. சு. வெ. சுடலைமாட நாடார் அவர்கள், சிறுநாடார் குடியிருப்பு. }
ஸ்ரீமான், வே. சு. வெ. வெள்ளைய நாடார் அவர்கள், பள்ளக்குறிச்சி. }
ஸ்ரீமான், இ. ஒ. சு. கு. சுடலைமாட நாடார் அவர்கள், சிறுநாடார் குடியிருப்பு.
ஸ்ரீமான், A. E. ஆபிரகாம் நாடார் & Co.; காலி (அடையல்)

போஷக கனவான்கள்.

ஸ்ரீமான், V. J. ஆர்தர் நாடார் அவர்கள். டால்வின் எஸ்டேட் (Delven Estate)
ஸ்ரீமான், க. பி. கெ. கலியாணசுந்தர நாடார் அவர்கள், கச்சிளுவிளை.
ஸ்ரீமான், பெ. குலசேகரப்பெருமாள் நாடார் அவர்கள், சிறுநாடார் குடியிருப்பு
ஸ்ரீமான், எஸ். பி. சார்ல்ஸ் அவர்கள், கொளம்பு.
மெஸர்ஸ், P. S. S. K. சிதம்பர நாடார் & Co., அவர்கள், இரத்தினபுரி(உடையிருப்பு)
ஸ்ரீமான், ம. ம. ஞானப்பிரகாச நாடார் அவர்கள், சோனகன்விளை.
ஸ்ரீமான், S. தேவாசீர்வாத நாடார் அவர்கள், செவந்திபுரம், (Karapincha Estate)
ஸ்ரீமான், D. S. பவர் நாடார் அவர்கள், சுவிசேஷபுரம், (Palm Garden Estate)
ஸ்ரீமான், கெ. ஞா. பாக்கியநாத நாடார் அவர்கள், சோனகன்விளை.
ஸ்ரீமான், அ. பெருமாள் நாடார் அவர்கள், சுப்பிரமணியபுரம்.
ஸ்ரீமான், J. K. மோஸஸ் நாடார் அவர்கள், மூக்குப்பீரி.
ஸ்ரீமான், ஞா. யோசப்பு நாடார் அவர்கள், உடையார்குளம்.
ஸ்ரீமான், வி. வீரபத்திர நாடார் அவர்கள், சோனகன்பேட்டை (தனிமலைஎஸ்டேட்)

ஜீவியசந்தா கனவான்கள்.

ஸ்ரீமான், P. S. அந்தோனிமுத்து நாடார் அவர்கள், காவல்கிணறு, கொளம்பு.
ஸ்ரீமான், சி. அணைந்தபெருமாள் நாடார் அவர்கள், கச்சிளுவிளை.
ஸ்ரீமான், E. A. S. அவிட்டபெருமாள் Esq; கேண்டி
ஸ்ரீமான், பா. பி. இரத்தினபாண்டியர் அவர்கள், திருமலையப்பபுரம்.
ஸ்ரீமான், சு. இராஜகுமார நாடார் அவர்கள், அடையல்.
ம-ா-ா-ஸ்ரீ, உறவின்முறை நாடார் அவர்கள், சுதுவிலா, மொறட்டுவா.
ம-ா-ா-ஸ்ரீ, உறவின்முறை நாடார் அவர்கள், நீர்கொளம்பு.
ஸ்ரீமான், செ. ம. எசுதாஸ் நாடார் அவர்கள், கல்விளை.

ஸ்ரீமான், ஆ. சு. இ. ஏசுவடிய நாடார் அவர்கள், கொம்மடிக்கோட்டை.

ம-ா-ா-ஸ்ரீ, காலி உறவின்முறை நாடார் அவர்கள், (அடையல் முதலூர்.

ம-ா-ா-ஸ்ரீ, காலி உறவின்முறை நாடார் அவர்கள், 104-ம் நெ, வீடு.

ஸ்ரீமான், M. கிரிஸ்டியன் நாடார் அவர்கள், முதலூர்.

ஸ்ரீமான், சி. கூ. சவரிமுத்து நாடார் அவர்கள், வடக்கன்குளம்.

ஸ்ரீமான், ரு. நா. ஷண்முக நாடார் அவர்கள், கிழநாலுமாவடி.

ஸ்ரீமான், ச. வெ. சுந்தர நாடார் அவர்கள், கச்சினுவிளை.

ஸ்ரீமான், பெ. சுப்பையா நாடார் அவர்கள், கொம்மடிக்கோட்டை.

ஸ்ரீமான், நா. சுப்பிரமணிய நாடார் அவர்கள், பெரியகண்டம்வடலி.

ஸ்ரீமான், D. ஞானசிகாமணி நாடார் அவர்கள், இடையன்குடி, கொளம்பு.

ஸ்ரீமான், G. R. ஜெயராஜ் நாடார் அவர்கள், (Darrawella Estate.)

ஸ்ரீமான், S. டேவிட் நாடார் அவர்கள், தித்திகுளம், (Madampe Estats)

ஸ்ரீமான், R. P. டேவிட் நாடாா அவர்கள், மருதகுளம்.

ஸ்ரீமான், ஞா. பா. தங்கைய.நாடார் அவர்கள், கச்சினுவிளை.

ஸ்ரீமான், க. வெ. அ. தங்கையா நாடார் அவர்கள், சோனகன்விளை.

ஸ்ரீமான், சோ. சு. ப. தங்கையா நாடார் அவர்கள், லக்ஷ்மிமாநகரம், ஆறுமுகநேரி.

ஸ்ரீமான், ஈ. தானியேல் நாடார் அவர்கள், வெள்ளாளன்விளை.

ஸ்ரீமான், A. V. தானியல் நாடார் அவர்கள், மாச்டிப்.

ஸ்ரீமான், வீர. துரைப்பாண்டியர் அவர்கள், வாழையடி.

ஸ்ரீமான், பெ. ப. சி. பரமகுரு நாடார் அவர்கள், சோனகன்விளை.

ஸ்ரீமான், மா. சு. பண்டார நாடார் அவர்கள், நாதன்கிணறு.

ஸ்ரீமான், S. P. பால் நாடார் அவர்கள், சுப்பிரமணியபுரம்.

ஸ்ரீமான், மா. பெரிய நாடார் அவர்கள், கச்சினுவிளை.

ஸ்ரீமான், க. பா. பெரிய நாடார் & பிரதர்ஸ், மூக்குப்பிரி.

ஸ்ரீமான், பெ. ரு. சி. பேர்பெற்ற நாடார் அவர்கள், பிரகாசபுரம்.

ஸ்ரீமான், S. பேரின்ப நாடார் அவர்கள், சாத்தன்குளம்.

ஸ்ரீமான், சு. ஆ. பேரின்ப நாடார் அவர்கள், சுப்பிரமணியபுரம்,

ஸ்ரீமான், S. S. பொன்னையா நாடார் அவர்கள், சங்கதயடியூர், உடன்குடி.

ஸ்ரீமான். பா. வே ஞா. ஆ. பொன்னையா நாடார் அவர்கள், வெண்ணைப்புரை.

ஸ்ரீமான், பா. சா. பொன்னுஸ்வாமி நாடார் அவர்கள், சாத்தன்குளம், கொளம்பு.

ஸ்ரீமான், நா. மனுவேல் நாடார் அவர்கள், தச்சன்மொழி.

ஸ்ரீமான், ரா. மலையப்பெருமாள் நாடார் அவர்கள், குலசேகரன்பட்டணம்.

ஸ்ரீமான், A. மாணிக்கம் Esq, அவர்கள், தொங்க தோட்டம்.

ஸ்ரீமான், A. R. P. முத்து நாடார் அவர்கள், அகப்பைகுளம்.

ஸ்ரீமான், நா. முத்து நாடார் அவர்கள், கச்சினுவிளை.

ஸ்ரீமான், வ. மா. வழுத்தான்புலவர் நாடார் அவர்கள், ராஜமன்யபுரம்.

ஸ்ரீமான், ப. வீ. ஈ. வீரசூரப்பெருமாள் நாடார் அவர்கள், படுக்கப்பத்து.

ஸ்ரீமான், கி. மு. மா. வேதநாயக நாடார் அவர்கள், உடையார்குளம்.

குறிப்பு:—நன்கொடை கொடுத்த கனவான்களில் இரக்ஷகர், போஷகர், அல்லது ஜீவிய சந்தாதாராய் சேர விரும்பும் அபிமானிகள் தாங்கள் செலுத்தியது போக பாக்கியையனுப்பி அவ்விதம் சேர்ந்துங் கொள்ளலாம்.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

க்ஷத்திரிய மித்திரன்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
XX. A. 12. (அ) மெய்ப்பொருள் காண்ப தறிவு."—(திருக்குறள்.)

மலர் 6. | 1924வரு செப்டம்பர்மீ | இதழ் 1.

தெய்வ வழிபாடு.

"பாவியே னினியென் செய்கேன் பரமனே பணிந்துன் பாதம்
சேவியேன் விழிநீர் மல்கச் சிவசிவ வென்று தேம்பி
ஆவியே நிறைய வந்த வமுதமே யெ[illegible]னே னந்தோ
சாவிபோஞ் சமயத் தாழ்ந்து சகத்திடைத் தவிக்கின் றேனே."

சான்றோர்குல ஆராய்ச்சி.

23-7-24-ல் சேலம், க்ஷத்திரியனில் வெளியானது.

அவரது ஆசங்கை.

நாம் இதுவரையில் சான்றோர் சொல்லை ஆராய்ந்து அஃது அறிவாலமைந்தோர்களையே அவர்கள் எவ்வகுப்பாராயினும் சுட்டுமென்று நிரூபித்தோம். கிராமணி அச்சொல் சம்பந்தமாய் இதுவரையில் கண்டுபிடித்த ஆதாரங்களும் இனி கண்டுபிடிக்கப்போகும் ஆதாரங்களும் அவனை ஆதரிக்காமல் நடுத்தெருவில் விடுமென்பதே நமது நிச்சயம். இதுவரையில் அவர்கள் அச்சொல் சம்பந்தமாய்க்கொண்ட அபிப்பிராயம் முழுவதும் தவறென்பதையும் வேறு அர்த்தத்தில் அதாவது 'அரசர்' என்னும் அபிப்பிராயத்திலாவது அல்லது சானார் என்னும் அர்த்தத்திலாவது அவர்கள் நிரூபிப்பார்களாயின் ஐந்நூறு ரூபாய்த் தருவதாய்ப் பந்தயமும் போட்டிருக்கிறோம் என்றார்.

எமது சமாதானம்.

"ஆடமாட்டாதவன் இடம் பற்றாது" என்பதைப்போல் இருக்கிறது இப் பள்ளிப்புலவர் கூற்று. யாம் சென்ற மாதம் வரைக்கும் சான்றார் என்பதே சான்றோர் ஆயிற்றெனவும், இலக்கண நூற்களில் "ஓர்" விகுதி கிடையாதெனவும், "அன் ஆன் அள் ஆள் அர் ஆர்" என்னும் விகுதிகளே இலக்கண நூற்களில் குறிக்கப்பட்டுள்ளதெனவும், "ஆஒ வாகும் பெயருமா ருளவே" என்னுந் தொல்காப்பியத்தால் செய்யுளில் அசைகுறைந்தவிடத்து 'ஓர்' விகுதியைப்பெற்று, சான்றார் என்பதே சான்றோர் ஆகுமெனவும், சான்றார் இல்லாமல் சான்றோர் என்னும் பதம் கிடையாதெனவும், அதனால் சான்றாருக்குரிய பொருளிலேயே சான்றோர் என்னும் பதம் நிற்றல் அ[illegible]ரிய

மெனவும், சான்றார் அல்லது சான்றோர் என்பது அறிவுடையோரையும், அரசரையும், சூரியனையும், சூரியகுலத்தவரையுங் குறிக்குமெனவும், அப் பள்ளிப்புலவர் கூறியவாறு அறிவுடையோரை மாத்திரம் குறிக்காதெனவும், திவாகர நிகண்டுகள்படி சூரியனையும், கம்பராமாயணப்படி சூரியகுலவரசரையும், சங்கநூற்கள்படி அரசரையுங் குறிக்குமென நூற்களைக்கொண் டெண்பித்துள்ளாம். அவற்றைக்கொண்டே "சான்றார்" என்பது "அரசர்" என்னும் அபிப்பிராயத்தில் நிற்குமென வறிவாராக. இனி அவ்வரசத்தன்மையை விளக்கும் சான்றார் என்னு பெயரே சாணார்என மருஉவியும், ஒருபொருளைக் கொண்டும் விளங்குமென வறிவிப்பாம்.

சான்றார்—ஓர் சாதியார்,
சாணான்—சான்றான்

"A Manual Dictionary of the Tamil Language" Bublished by Jaffna Book Society in 1842. இவ்வகராதி தமிழ்ப் பாஷைக்கு ("சதுரகராதிக்கு அடுத்து") இரண்டாவதாக ஏற்பட்ட அகராதியாகும்.

சான்றார்—சாணார்
சாணான்—ஓர் சாதியான், sometimes சான்றான்.

Winslow's Tamil and English Dictionary in 1862.

சான்றார் மருஉ சாணார்

சு. ஜெகராவ் முதலியார் பதிப்பித்த இலக்கண சிந்தாமணி பக்கம். 58. in 1889.

சான்றார்—சாணார், சான்றோன்
சாணான்—ஓர் சாதியான், சான்றான்

யாழ்ப்பாணம், ந. கதிரைவேற் பிள்ளை, தமிழ்ப்பேரகராதி in 1899.

"Shanar is current only in colloquial use, but this word in not to be found in standard works. Shanar is the corrupted from of Shandrar."

"சாணார் என்ற வார்த்தை சாமான்யமாக (உலக வழக்கில்) வழங்கிவருகின்றது. ஆனால் இந்த வார்த்தை நூற்களில் காணப்படவில்லை. சாணார் என்பது சான்றார் என்பதிலிருந்து மருஉவி வழங்கிவருகின்றது." என உத்தமதானபுரம், மகாமகோபாத்தியாயர்-வே. சாமிநாதையர், 1899-ம் வருடத்தில் நடந்த கமுதி கேஸில் வாக்குமூலங் கொடுத்திருக்கின்றார்.

"Shandara meaning a Caste is Colloquially pronounced as Shanar."

"சான்றார் என்பதொரு சாதிப்பெயர். அது சாமான்யமாக சாணார் என உச்சரிக்கிறது." என இராமநாதபுரம் சமஸ்தான வித்வான், இராகவையங்கார் கமுதிகேஸில் வாக்குமூலங் கொடுத்திருக்கிறார். மதுரை காலேஜ் தமிழ்ப் பண்டிதர்-இராகவையரும் இவர்களோடொப்பக் கூறியுள்ளார். ஆகவே இத்யாதிப் பிரமாணங்களால் சான்றார் என்பது சாணார் ஆகுமென வறிவாராக.

"It would be a mistake to suppose that climbing the tree and boiling its juice are the only occupations of the Shanars. Many of them, perhaps the greater number, are cultivators of the land, like other ryots; sometimes renters, sometimes proprietors of the land they cultivate. Some are traders, and some are day-labourers.—One member of a devision of the caste is a Zamindar." "The Nadans, a name signifying 'lords of the soil,' are Shanar land-owners, who claim rights of seigniorage over most of the villages in the south."—Bp. Caldwell in his "Tinnevelly and the Tinnevelly Mission," 1869; "Mission of Edeyenkoody," 1845.

"சாணாரது தனிமையான தொழில் மரம் ஏறுகிறதும், வெல்லங் காய்ச்சுகிறதுமென நினைப்பதும் தவறாகும். அவர்களில் அநேகர் அதாவது நூற்றிற்கு தொண்ணூறுபேர் விவசாயிகளாகவும் குத்தகைவிட்டுக் கொடுப்பவர்களாகவும், சில சுவாதீனக்காரர்களாகவும், வர்த்தகர்களாகவும், மற்ற தொழிலாளர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் சாதியில் ஒரு ஜெமீந்தாரு

மிருக்கிறார். நாடான் என்பதற்கு அர்த்தம் நாட்டுக்கதிகாரி எனப்படும். அவர்கள் தென் தேசத்திலுள்ள அநேக கிராமங்களின்மேல் அவர்களது பூர்வ பாரம்பரையான அதிகாரத்தைச் செலுத்திவருகிறார்கள்." என பிஷப்பு கால்வெல்துரை அவர்கள் 1845-ம் வருடத்திலேயே கூறியிருக்கின்றார்.

இப்பகுதியோடு சென்ற மாதம் யாம் தெரிவித்த எங்குலமணியாகிய ஏனாதிநாத நாயனாருக்கும் அவர் குலத்தவருக்கும் உரியதென யாம் விளக்கிய குலத்தொழிலாகிய ஆயுதத்தொழிலையும்; நாடார் என்பதிலுள்ள நாடு ஆல் என்னும் அரச சப்தத்தையும்; சங்க நூற்களில் விளங்கும் சான்றார் என்பதுகள் பொருநர் என்னும் பொருளுடைமையையும், "பொருநல் சங்கிராமம் தெவ்வுப் பூசலா யோதனம் போர்" என்னும் நிகண்டில் விளங்கும் சங்கிராமம் என்பது போரை விளக்கி, அப்போரையுடைய சாதியாரை சங்கிராமணி எனப்பட்டு, செஞ்சுடரோன் என்பது சுடரோன் என நின்றும் சூரியனைத் தெரிவித்தலைப் போல், சங்கிராமணி என்பதும் முதற்குறைந்து கிராமணி என நின்றும் பொருளுடைமையைத் தெரிவித்தலையும் ஒன்றுபடக் கவனித்து, சான்றோரை கள்குலத்தவர் எனக் கொள்ளும் பள்ளிப்புலவரின் மூடமதியை விட்டொழிப்பாராக.

"They (Shanars) do not merely mean that they were the original kings of the soil, but that they are descended from the Aryan Kshatriyas." Vide Dr Cornish in the Madras Census Report for 1871.

"சாணார்கள் பூர்வஅரசவம்சத்தவர்கள் என்பது மாத்திரமல்ல, அவர்கள் ஆரிய க்ஷத்திரிய வம்சத்தில் உதித்தவர்களுமாவர்." என சென்செஸ் சூப்பிரன்டெண்டு, கார்னிஷ்துரை அவர்கள் 1871-ம் வருடத்து சென்செஸ் ரிபோர்ட்டில் கூறியுள்ளார். இப்பகுதியையும் மேற்கூறியவைகளோடு ஒத்திட்டு சான்றோர்களாகிய சாணார்கள் அரசவம்சத்தவர்களென வறிந்து அவரது பள்ளிவாதத்தை பள்ளத்துளாழ்த்துவாராக.

இனி அவர் தருவதாகக் கூறிய பந்தயம் ரூபாய் (500) ஐந்நூறையும், அவர் சரியான உயர்குலப் பள்ளியாயிருந்தால் கொடுத்தனுப்பிவிடுவார். அல்லது யாம் விளக்கிய பகுதிகளை அவரதுபத்திரிகையில் அப்படியேவெளியிட்டு, நூலைக்காட்டி யாம் சொல்லியது சரியல்லவென கண்டிக்க முந்துவாராக. இரண்டும் இலதேல் அவர் "பிள்ளை, நாய்கர், வர்மா" வென பல பட்டப்பெயர்களை பெற்றிருப்பதற்கேற்ப, தவறாகப் பிறந்தவரெனக் கொள்ளவேண்டிவருமென வறிவாராக.

அவரது ஆசங்கை.

நாடார் என்னும் சொல் நாட்டுக்குடையோர் அதாவது அரசர் என்னும் பொருளைத் தருவதாய் நமது கிராமணியும் அவரது குலத்தவர்களும் நம்பிக்கொண்டு நூல்கள் எழுதுவதும் பத்திரிகைகளில் வாதாடுவதுமாய்க் காலங்கழிக்கின்றனர். அச்சொல் அவ்வித அர்த்தமுடையதுதானா? அல்லது வேறுவித உரை அதற்குண்டா என்பதை உலகறியச் செய்ய வேண்டியிருக்கின்றது. நூல்களில் வழங்கும் நாடான் என்னும் சொல்லும் நாடார் என்னும் சொல்லும் எவ்வித அர்த்தத்தில் ஏற்பட்டன என்பதை இவர்கள் கவனிக்க நேரமில்லாதது பற்றி விசனிக்கிறோம். தான்தோன்றி சம்பிரதாயமாய் மற்றவர் யாரும் ஏற்றுக்கொள்ளாதபடி ஓர் புது உரையை இவர்கள் கற்பிக்கின்றனர். இன்னும் சில இடங்களில் பாட்டிற்கே உரை தெரியாமல் மூடத்தனமாய் இவர்களது அபிமான உரையை ஏற்றித் தமிழ் வழக்கையே பாழ்செய்கின்றனர். உதாரணமாக அடியிற்கண்ட பாடல்களும் அவைகட்குக் கிராமணி க்ஷத்திரிய மித்திரன் மலர் 2, இதழ் 6, 174, 175-பக்கங்களில் எழுதிய உரைகளையுங் கண்டு குறிப்பிடுகின்றோம்:—

பெருந்தேவனார் பாரத வெண்பா.

உத்தியோகப் பர்வம்.

நாடறிய நாடார் சபையகத்தே யாஞ்சாலி
நாடரிய தூகரிந்த நாசத்தால்—நாடறியத்

தன்னேவர் திர்க்கத் தழைபூங் குழல்விரித்த
பொன்னேயவ் வண்ண மகள்.

(ப-ரை.) "நாடு அறிய - நாட்டிலுள்ளோர் எல்லாம் அறியும்படி, நாடார் - அரசர்களது, சபையகத்தே-கொலு மண்டபத்திலே, பாஞ்சாலி - த்ரௌபதையினது, நாடு - நாடுதற்கு, அரிய-அரியதாகிய, துச-சேலையை, உரித்த-அவிழ்த்த, நாசத்தால்-கேட்டினால், நாடு அறிய-நாட்டிலுள்ளோர் அறியும்படி, தன் ஏவம்-தனக்கு உண்டாகிய வருத்தத்தை, தீர்க்க-தீர்த்துக்கொள்ளும் பொருட்டு, தழை-மயிற்றோகையை யொத்த, பூ-அழகிய, குழல்-கூந்தலை, விரித்தாள் - (முடியாது) தொங்க விட்டாள். (அவள் யாரெனில்) அவ் வண்ணமகள்-அந்த (விராடன் பட்டணத்தில்) வண்ணமகளாயிருந்த, பொன்னே-இலட்சுமிக்கு ஒப்பாகிய த்ரௌபதியே என்பதாம்.

(கருத்துரை) த்ரௌபதையின் சேலையை இராஜ சபையில் அவிழ்த்து மானபங்கஞ் செய்தமையின், அவ் வருத்தந்தீரும் பரியந்தம் கூந்தலை முடியாது தொங்கவிட்டாள் என்பதாம்.

இச் செய்யுளில் சந்திரகுலத் துரியோதன மகாராஜன் சபையை அதாவது கொலுமண்டபத்தை 'நாடார் சபை' என்றழைத்தனர் பெருந்தேவனார். நாடார் என்பது இங்கு 'நாட்டையாளும் உரிமையுடையார்' என அரசருக்குக் கொள்ளப்பட்டது. நாடார் என்பது இடப்பெயர் பகுபதம். 'நாடு' என்னும் பகுதியும், 'ஆர்' என்னும் பலர்பால் விகுதியும் 'உயிர்வரின் உக்குறள்' என்பதனால் உகரக்கேடு சந்தியும் பெற்று உடன்மேல் உயிரேறி முடிந்தது."

இதுவரை இக்கவிக்கு அந்த சாணார வித்வான் செய்த விரிவுரையாகும். இவ்வுரையில் எத்தனையோ குற்றங்கள் அடுக்கடுக்காய் அமைந்துள்ளன. அவைகளை யெல்லாம் விட்டுவிட்டு, 'நாடறிய நாடார் சபையகத்தே' என்ற சொற்றொடருக்குச் செய்த உரையை மட்டும் எடுத்துக்கொண்டு விசாரிப்போம். நாடு அறிய நாடார சபையகத்தே என்பதில் முதல் நாடு என்பதிலேயே சபையிலிருந்து வேடிக்கை பார்த்த சகலரும் அடங்கிவிட்டார்கள். கொலுக்கூடத்திலிருந்த துரியோதனன் என்னும் அரசன் முதல் மற்ற சில்லரை உத்தியோகஸ்தர்கள் வரை அங்கு த்ரௌபதையை துஸ்ஸாசனன் செய்த அக்கிரம காரியத்தை அறிந்தார்கள். அவர்களைத் தவிர்த்து ஊரிலுள்ள பிரஜைகள் ஒருவரும் அங்குவர ஞாயமில்லை. அஃது அரசனது கொலுக்கூடமல்லவோ? 'நாடறிய' என்பதிலேயே கிராமணி கொண்டதாற்பரியம் அடங்கிவிட்டதால் அடுத்த 'நாடார்' என்னும் சொல்லில் அவ்வுரையை யேற்றுதல் இலக்கண விரோதமன்றோ? கூறியது கூறலென்னும் குற்றமல்லவா? எப்படியெனில் காட்டுவாம். 'நாடு அறிய - ராஜசபையறியும்படி, நாடார் சபையகத்தே - ராஜசபையிலே' என்று ஏற்படும் உரை குற்றமல்லவா? பெருந்தேவனார் பாரதத்திற்குப் பள்ளிக்கூட பரிட்சைக்காக அநேகர் உரையெழுதி யிருக்கின்றனர். அவ்வுரைகளைக் கிராமணி தயவுசெய்து பார்க்கட்டும். தமது புலமைத் திறமையைத் தெரிந்துகொள்ளட்டும். இனி அப்பாடலின் முதல் அடியின் உண்மையான உரையாவது:—

'நாடறிய-உலகங்காண, நாடார்- விரும்பத்தகாதவர்களாகிய துரியோதனாதியர், சபையகத்தே - கொலுக்கூடத்தில்' என்பதாம். பின் தனிச்சொல்லாய் வந்த 'நாடறிய' என்னும் சொற்களில் முதற் சொல்லாகிய 'நாடு' என்பதற்கும் அதே உரைதான்.

நாடு-இந்த இரண்டிடங்களிலும் ராஜசபைதான். உலகமென்பதற்கும் அதுவே தாற்பரியம். உலகமென்பது உயர்ந்தோர் மாட்டாதலால் உயர்ந்தோர் குழுமியிருந்த அரசசபை 'நாடு' எனப்பட்டது. நாடார்-விரும்பத் தகாதவர்கள் அதாவது பகைவர்கள். அவர்கள் துரியோதனாதியர் என்பதில் சந்தேகமில்லை. உற்றார் சபையில் நேரும் அவமானத்தை விட பகைவர் சபையில் நேரும் அவமானம் அதிகமென்பது ஈண்டு குறிப்பிடத் தக்கது. இக்கவியில் 'நாடார்' என்னுஞ் சொல் எவ்வர்த்தத்தில் உபயோகப்பட்டிருக்கிறதோ அதே அர்த்தத்தில்தான் அவர்களது பட்டப்பெயரும் அமைந்திருப்பதென்பதைக் கிராமணி ஒத்துக்கொ

ள்வது போலும் இப்பாடலை யாண்டார். என் இவ்வளவு மதியீனம்? தக்க புலவர்கள் எழுதிய உரையை அவர் பார்க்கும்படி மீண்டும் அவரைத் தூண்டுகின்றோம் என்றார்.

எமது சமாதானம்.

இவ்விதமாக அப்பள்ளி வித்துவான் “நாடார் சொல்ஆராய்ச்சி” என தலைப்பங்கமிட்டு, அவரது ஆபாசக்காஞ்சியத்தை மூடத்தனமாக குறிவழித்தார். எம்மையும் கூடே நிந்தித்தொழித்தார். இவற்றிலுள்ள குற்றங்கள் ஒவ்வொன்றிற்கும் யாம் சமாதானம் அளிப்பதாயிருந்தால் இக்கவிதழும் முடிவெய்தி, அடுத்த இதழுக்கும் வழிதேடவேண்டிவரும். அவைகள் பயனில் சொற்களாயினமையின் விடுத்து விஷயத்தைக் கவனிப்பாம்.

பாரதவெண்பாவுக்கு பள்ளிக்கூடப் பரிட்சைக்காக, அநேகர் உரை எழுதியிருப்பதாகக் கூறி, வெறும்வாயை மெல்லுகின்றாரேயன்றி, அவ்வுரையை எழுதிக்காட்டினாரில்லை. அப்படித்தான் இவர் எந்தப் பள்ளிக்கூடத்தில் படித்தார்? உரையின் தன்மையை இவர் அறிந்துகொள்ள. இருப்பினும் யாம் அப்பள்ளிப்புலவருக்கு உரையின் தன்மையை யறிவிப்பாம்.

எம்மிடம் இருக்கும் பிரதிக்கு புத்தகமுகப்பு (Title Page) இல்லை. அதனால் அப்புத்தகம் அச்சிட்டகாலத்தையும், உரை யெழுதியவர் பெயரையும் அறியமுடியவில்லை. பழைய பூராணமே! காகிதம் பழுத்திருக்கிறது. அதோடு அப்புத்தகம், 64-வது பாட்டுரையின்கீழ் குறித்திட்டிருக்கும் பதிப்பாசிரியரது அபிப்பிராயத்தை நோக்கின், எம்மிடம் இருக்கும் பிரதியே முதல்பதிப்பாகவும் காணப்படுகிறது. 64-வது பாட்டு. 20-அடிகள் கொண்ட நிலமண்டில வாசிரியப்பாவாகும். இவ் வாசிரியப்பாவின்கீழ் உரையாசிரியர் எழுதிய அபிப்பிராயம் வருமாறு:—“இந்த அகவல் இடையில் யாரோ செய்ததேயல்லது பெருந்தேவனார் செய்ததென்று சொல்லக்கூடவில்லை. ஏனெனில், இதிற்சொல்லிய காரியம் பின்னுமுன்னும் விளங்குகின்றது. வெண்பாப் பாடிவந்தவர் இடையில்ஒருஅகவலைப்பாடக்காரணமுமில்லை. நடையும் முந்தியபாடல்களுக்கு ஒத்திருக்கவில்லை. பாட்டெண்களுக்கும் இதை நீக்கியே போட்டிருக்கிறது. ஆயினும் பிரதிகளிற் காணப்பட்டபடியால் யாமும் உரையிட்டனம்.” என்றார். இவற்றால் இவ்வுரைக்காரர் எட்டுப் பிரதியைக்கொண்டே முதலில் அச்சிட்டவர் என விளங்குகின்றது. அப்படி அச்சிட்டவரும் உத்தியோகப் பருவம் மாத்திரம் அச்சிட்டு, அப்பருவத்தில் 151-செய்யுள்களைக் காட்டி, அவற்றிற்கு உரையும் எழுதியுள்ளார். இவ்வுரையும் அச்சிட்டவர் உரையோ! அல்லது பூர்வவுரையோ அதையும் கண்டறியமுடியவில்லை. அப்புத்தகம் 210-பக்கம் கொண்டுள்ளது. அவற்றில் விவாதத்திற்குரிய செய்யுள், அப்புத்தகம், 40-வது பக்கத்தில், 51-வது செய்யுளின் கீழுள்ளதாகும். அப்பதிப்பார் அச்சிட்டவாறு, மூலத்தையும் உரையையும் இங்கறிவிப்பாம்.

பாரதவெண்பா உத்தியோகபருவம்;
52-வது செய்யுள்.
பீஷ்மர் சொல்லியது:

நாடறிய நாடார் சபையகத்தே பாஞ்சாலி
நாடறிய தூசுரிந்த நாசத்தால்—நாடறியத்
தன்னேவந் தீர்க்கத் தழைபூங் குழல்விரித்த
பொன்னே யவ்வண்ண மகள்.

(இ-ள்.) நாடு அறிய - நாட்டிலுள்ளோரெல்லாம் அறியும்படி, நாடார் சபையகத்தே - அரசர்களுடைய சபையிலே, பாஞ்சாலி - துரோபதியினது, நாடல்றிய - பார்த்தலும் தீயதான, தூசு - வஸ்திரத்தை, உரிந்தநாசத்தால் - அவிழ்த்த கேட்டினால், நாடு அறிய - யாவரும் அறியும்படி, தன் ஏவம் - தனக்குண்டாகிய வருத்தத்தை [கோபத்தை], தீர்க்க - போக்குதற்கு, தழை - தழைந்த, பூங்குழல் - அழகிய கூந்தலை, விரித்த - தொங்கும்படி விட்ட, பொன்னே - இலக்குமி போன்றவளே, அவ்வண்ணமகள் - முன் (விராட பட்டணத்தில்) வண்ணமகளாயிருந்தவர்.

உங்களிலும் பலவான்களாயிருந்த கீசகர்களைக் கொல்லக் காரணமாயிருந்தவர் துரோ

பதி யென்பதையும், உங்களைக்கொன்ற பிறகு தான் தன் கூந்தலை முடிப்பேனென்று அவள் முன்பு பிரதிக்கினை செய்ததையு நினைப்பிக்க வென்று குறிப்பித்தபடி.

'பெண்மினர்' எனவும் பாடமுண்டு. நிய என்பது 'நிய' எனக் குறைந்து நின்றது. பதிவிரதையின் வல்லிரக்கத்தைத் தீண்டுதலேயன்று, நோக்குவதும்தீமை பயக்குமென்றபடி. "காடறிய" என வைத்து காடுதற்கு அரிய எனவுமுரைக்கலாம்.

"நாடார்" என்பது இந்த நாட்டை ஆளும் உரிமையுடையர் என அரசர்க்குக் கொள்ளப்பட்டது. 'பாஞ்சாலி'=பாஞ்சாலராசன் மகள்; பஞ்சாலதேசத்து அரசன் பாஞ்சாலன், இவையும் தத்திதாந்தம். 'உரிந்தநாசம்'=உரிந்ததனுள் ஆகிய நாசம்; "சங்குசுட்ட சுண்ணாம்பு" என்பதுபோல் பெயரெச்சம் காரியப்பெயர் கொண்டது; அல்லது "உண்டசெய்கை" என்பதுபோல் உரிந்ததாகிய நாசம் எனத் தொழிலைக்கொண்டதெனவும் கொள்ளலாம். இங்கு 'நாசம்' என்றது அதன் ஏதுவுக்கு ஆகுபெயர், கூந்தலை விரித்ததற்கு இது காரணமாதலின் எனவுணர்க. "தழற்பூங்குழல்" என்கிற பாடத்தில் பூங்குழலாகிய தழலை எனமாற்றி உருவகப்படுத்தி யுரைத்துக்கொள்க. அவள் கூந்தலை விரித்தது உங்களைசுடத் தழல்விரித்தது போலும் என்பது கருத்தாம் 'பூங்குழல்' பூப்போன்ற குழல் என்றுமுரைக்கலாம். பூவையுடைய குழல் என்பது தற்காலத்திற்குப் பொருந்தாது. [உயிர் - ரு - டு] ணல் ககரம் தோன்றிற்று.

என இவ்விதமாக அச்செய்யுளின்கீழ் உரையும், விசேஷவுரையும் எழுதப்பட்டுள்ளன. இவ்வுரைக்குமுன் நமது கௌண்டப் புலவரின் உரை தலைக்காணிபுரையாகவே மாறவேண்டி வரும். அக் குப்பைவாரிப்புலவர் தெரிவித்த "காடு அறிய=ராஜசபை யறியும்படி, காடு அறிய=இங்கு இரண்டிடங்களிலும் ராஜசபைதான்" எனக் கூறிய அவரது உரையை அவரது பள்ள அகராதியில்தான் பார்க்கக் கிடைக்கும். இங்கு அச் செய்யுளைக்குறித்து எமது அபிப்பிராயத்தையும் கொஞ்சங் கூறி முடிப்பாம்.

"காடறிய நாடார் சபை" என்னுந் தொடரில் வரும் காடறிய என்பதற்கு ராஜசபையிலிருந்து வேடிக்கைப்பார்த்த சகலரும் அடங்கிவிட்டார்கள், ஊரிலுள்ள பிரஜைகள் ராஜசபைக்கு வர நியாயமில்லை. அவ்வக்கிரமச் செய்கையை தெரிந்துக்கொள்ள வென்கின்றார்.

வில்லிபாரதம், சபாபருவம்,
சூதுபோர்ச் சருக்கம், 220-வது செய்யுள்.

"சூழுஞ் சனல்வா யுருமன்றித்
துளிவாய் முகிலு மகிதலத்து
வீழுங் கொல்லோ வுற்பாதம்
விரவித் தென்றே வொருஉக் கொள்ளத்
தாழும் பெரிய கரியகுழ
லோரோடலைபத் தழீஇக் கொண்டு
வாழுஞ் சுரும்பு சுழன்றற்ற
மண்மே லிழுத்து வருகின்றான்."

என்னுஞ் செய்யுளில் துச்சாதனன் திருதராஷ்டிரனது அரண்மனையிலிருந்து த்ரௌபதையை ராஜசபைக்கு தெருக்கள் வழியே இழுத்துவந்ததாக விளங்குவதால், அவ்வக்கிரமச் செய்கையை முதலில் ஊரார் அறிந்தபிறகே, ராஜசபையார் அறிந்தார்களென்பதை விளக்க "காடறிய" என்னும் பகுதியை பெருந்தேவனார் முதலில் வைத்தனர் போலும். பள்ளி என்பதற்குப் பகுதி பள்ளம் ஆகும். சக்கிரி என்பது சக்கரம் என்னும் பகுதியைப் பெற்றதைப்போலுமென்க. இவ்வகையால் அப்பள்ளிப்புலவரின் உரை பள்ளத்தையே நோக்குகின்றது. உரையாசிரியருக்கு முன் கிளிர்த்தெழவில்லை. அது அவரது குற்றமன்று, சாதியின் தன்மை. இதோடு முடிப்பாம்.

(பத்திராதிபர்.)

✻ ஆரிய க்ஷத்திரியகுல விளக்கம். ✻
தபால் சார்ஜ் உள்பட ரூபா 1—8—0.

நாடார் மஹாஜன சங்கம்.

ஒன்பதாவது கான்பரன்ஸ், மதுரை.

உபசரணைக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான், கூ. மு. அ. வடிவேல்முருக நடார் அவர்களின் பிரசங்கம்.

1924-ம் வருஷம் ஜூலைமீ 18, 19, 20 தேதிகளில் நடைபெற்றது.

முதல் நாள் நடவடிக்கை.

(உபசரணைக் கமிட்டித் தலைவராகத் தெரிந்தெடுக்கப் பெற்றிருந்த ஸ்ரீமான் கூ. மு. அ. வடிவேல்முருக நாடாரவர்கள் கான்பரன்ஸ் தேதிக்கு முந்திய வாரத்தில் சிவலோக பிராப்தியெய்தியதால், அன்னாரால் தயாரிக்கப் பெற்றிருந்த பிரசங்கத்தையே முதல் நாளன்று அவருடைய மூத்த குமாரர் ஸ்ரீமான் பழனியப்ப நாடாரவர்கள் பின்வருமாறு வாசித்தார்கள்.)

கல்வி.

சான்றோர்களே!

அதி மேன்மையும், உன்னதமும் கருணையும் தங்கிய சமஷ்டி சக்கிரவர்த்தி அவர் "கல்விச் சாலைகள் இந்தியாவில் வலை விரித்தது போலிருக்கவேண்டும்" என்றும், முன் கவர்னர் ஜெனரலாயிருந்த கனம் தங்கிய லார்ட் ஹார்டிஞ் அவர்கள் "பரம ஏழையாயிருப்பவனுங் கூட எழுத வாசிக்கத் தெரிந்துகொள்வது அவனுடைய ஜென்ம பாத்தியமென் றுணரும்படி செய்ய விரும்புகிறேன். இதுவே என்னுடைய இருதயத்திற்கு அருகிலிருக்கும் எண்ணம்" என்றும் மைசூர் திவான் மிஸ்டர் விஸ்வேஸ்வர அய்யர் அவர்கள் "ஜனங்களிற் பெரும்பான்மையோர் எழுத்து வாசனையே யில்லாதவர்களா யிருக்கிற வரையில், சமூகத்தின் முற்போக்கும் கவர்ன்மெண்டின் முயற்சிகளும் தடைப்பட்டுக்கொண்டேயிருக்கும். ஆகையால் படித்திருந்த ஒவ்வொருவரும் ஜனங்களுள் அறிவு பரவும்படியாக முயற்சி செய்யவேண்டியது" என்றும், கனம் ஹோல்கார் மகாராஜா அவர்கள் "ஜன சமூகத்தில் தங்களுக்குத் தாங்களே உதவி செய்துகொள்ளக் கூடாத நிர்பாக்கியர்களா யிருக்கிற வகுப்பார்கள் பெரும்பாலரா யிருக்கிறார்கள். அவர்கள் அசையும் பொருள்களா யிருக்கிறார்களே யொழிய, தங்களுடைய சுகாவசங்களை விருத்தி செய்து, தங்களை அறிவுள்ள ஆண்களாயும் பெண்களாயும் செய்துகொள்ளக் கூடாதவர்களா யிருக்கிறார்கள். கல்வியினாலும் அந்தஸ்த்தினாலும் மிக்குயர்ந்தவர்கள், மேற்கண்டவர்களின் முன்னேற்றத்திற்கு உழைத்தால்தான் ஜாதீய உணர்ச்சி பெருகும்" என்றும், கனம் கோபாலகிருஷ்ண கோகலே அவர்கள் கட்டாயப் பிரதமக் கல்வி சட்ட பூர்வமாய் இந்தியாவில் ஏற்படுத்த வேண்டுமென்று பிரயாசை யெடுத்து வந்ததும், நம்முடைய கான்பரன்ஸ்கள் தோறும் கல்வியைப் பற்றி ஒவ்வொருவர்களும் சாங்கோபாங்கமாய்ப் பேசியிருக்கிறார்களென்றதும் நீங்கள் எல்லோரும் அறிந்த விஷயங்களே. தற்காலம், பிரசாரர்கள் மூலமாயும் நம் குலப் பத்திரிகைகளின் மூலமாயும், விசேஷமாய் சொல்லிவருவதால், அங்கங்கே நம்மவர்களுடைய கல்வி சிறிது பலனடைந்து விர்த்தியாகி வந்த போதிலும், இன்னும் செய்யவேண்டிய வேலைகள் அதிகமாயிருக்கின்றன. ஜனக்கணிதப்படி நூற்றுக்கு பதினொன்று பேர்கள்தான் நம்மவர்களில் படித்தவர்களா யிருக்கிறார்கள். பெண் கல்வியை நோக்குங்கால், அதைவிட மிகவும் குறைவாக விருக்கிறது. கல்விக்கு பெண்ணுருவே சரஸ்வதியை தெய்வமாகவும், செல்வத்திற்கு இலட்சுமியை தெய்வமாகவும், முன்னோர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். முன் காலத்தில் மதுரையை அரசாண்ட மங்கம்மாளும், இப்போது பிரிட்டிஷ் ராஜ்யத்தை செவ்வனே செலுத்தி நடாத்தின விக்டோரியா

மகாராணியாரவர்களும், கல்வியின் திறமையால் அரசாட்சி செய்தார்களென்பதே பெண்களுக்கு கல்வி அத்தியாவசியமென்பதற்குப் போதிய சான்றாகும்.

நம்மை ஆளும் ஆங்கிலேயர்கள் கல்வியின் முயற்சி. கைத்தொழில் அபிவிர்த்தி. சரீரப் பயிற்சி விடாமுயற்சி முதலியவைகளில் அபிவிர்த்தி அடைந்ததனால், உலகத்திலேயே பெரும்பாகத்தை ஆண்டு வருகிறார்கள். அதனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் சூரியன் அஸ்தமிக்கிறதேயில்லை. ஊரில்கூட குடியிருக்கக்கூடாதென்றிருந்த யூதர்கள் இப்பொழுது கல்வியிலும், கைத்தொழிலிலும் முன்னேறியதால் அவர்களில் நம்மிந்தியாவுக்கு மந்திரியாகவும், இராஜப் பிரதிநிதியாகவும் இருக்கவும், பெரும் செல்வர்களாகி அரசர்களுக்கும் கடன் கொடுக்கும் பாக்கியவான்களாயுமிருக்கிறார்கள்.

நம் பாரதகண்டத்தில் பிராமணர்கள் ஆதிமுதல் கல்வியையே பிரதானமாகக் கொண்டு அபிவிர்த்தியாகிய தன் பலனாய் அந்தக்காலத்திலும் சரி இந்த நவீன நாகரீககாலத்திலும் சரி பெரிய உத்தியோகங்களை வகிப்பதோடு எக்காலத்திலும் பெரும்புகழை அடைந்து வருகிறார்கள். பார்சிக்காரர்கள் அந்நியர்களால் ஒடுக்கப்பட்டு இந்தியாவுக்கு வந்தார்கள். அவர்கள் ஆணும், பெண்ணும் படித்துத் தேறி அநேக சர்க்கார் உத்தியோகங்களில் அமர்ந்திருப்பதோடு பெரும் பேற்றினை அடைந்திருக்கிறார்கள். அவர்களில் இந்தியாவின் மாபெரும் கிழவரான தாதாபாய்நௌரோஜி அவர்களும், ஸர் பொவனகிரி அவர்களும் லண்டனில் பார்லிமெண்ட் மெம்பராகியிருந்தார்கள். தற்காலம் முகம்மதியர்களும் கல்வியின் அபிவிர்த்தியால் முன்னேறி வருகிர்கள்.

நமது கவர்ன்மெண்டார் ஆங்காங்கு கலாசாலைகள் வைத்தும், இதர கலாசாலைகளை ஆதரித்தும் வருகிறார்கள். இம் மதுரை ஜில்லாவில், கள்ளர்களின் அபிவிர்த்திக்காக கலாசாலைகள் ஏற்படுத்தி, கட்டாயமாகக் கல்வி கற்கும்படி செய்திருப்பதோடு கைத்தொழிலில் நெசவு செய்தல் மரவேலைகள், உலோகபாத்திரங்கள் செய்தல் முதலிய பல வேலைகளையும் சொல்லிக்கொடுத்து அவர்களை முன்னேற்றி வருகிறார்கள்.

இம் மதுரை மாநகரின் கண்ணே அதிகமான ஜனத்தொகையையுடைய சௌராஷ்டிர பிராமணர்கள், கல்வியின் அபிவிருத்தியால் சாயத் தொழில்களை நூதன முறையில் கண்டுபிடித்து, சாயத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தி பெரும் தனவந்தர்களாயிருக்கிறார்கள். இதற்கு ஸ்ரீமான் துளசிராம் அவர்களின் கல்வியே முதற்காரணமாகும். இப்பொழுது சௌராஷ்டிரர்களின் ஆதரவில் அநேக பாடசாலைகள் நடைபெற்று வருவதுடன், ஒரு பெரிய கல்லூரியும் கட்ட ஆரம்பித்து கட்டடம் அநேகமாய் முடிவடையும் ஸ்திதியிலிருக்கிறது. கல்வி விஷயத்தில் அவர்களின் முயற்சியைப் பாருங்கள்.

சென்னையில் கூடிய நமது இரண்டாவது கான்பரன்ஸில் அக்கிராசனம் வகித்த ஸ்ரீமான் வி. சங்கரன் நாயர் அவர்கள் நமக்குச் செய்த அரிய உபதேசங்களில் கல்வியைப்பற்றி சொல்லியிருப்பதை ஒவ்வொருவர்களும் கவனித்திருப்பீர்களே யானால், இப்பொழுது நம்முடையவர்களின் கல்வி எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்திருக்குமென்று சற்று சிந்தித்துப் பாருங்கள்.

நமது மஹாஜன சங்கத்திற்கு ஏராளமான பணம் சேர்ந்திருந்தால், இப்போது கல்விக்காக செய்திருக்கிற வேலைகளைப் பார்க்கிலும் பன்மடங்கு அதிகமாகச் செய்திருக்கலாம், ஆகையால், நமது மஹாஜன சங்கத்திற்கு எந்தெந்த வழிகளெல்லாம் பணத்தைப் பெருக்கலாமோ, அந்தந்த வழிகளில் பொருளைப் பெருக்கி சங்கத்திலிருந்து நடக்கும் கல்விவேலைகளை அதிகப்படுத்தி நாம் நம் ஜன சமூகத்தின் கல்வியை விருத்தி செய்யலாம். விருதுநகர் சிவகாசி, அருப்புக்கோட்டை, நிலக்கோட்டை பட்டிவீரன்பட்டி, கடம்பூர், இந்நகர் தெற்குவாசல் முதலிய இடங்களில் மகமைப்பணத்தில் பள்ளிக்கூடங்கள் நடைபெறுவதைப் போல

வும், காலஞ்சென்ற ம-ா-ா-ஸ்ரீ வாலசுப்பிரமணிய நாடார் அவர்களால் பாலையம்பட்டியிலும், காலஞ்சென்ற மகா-ா-ா-ஸ்ரீ நா. க. வள்ளியப்ப நாடார் அவர்களால் கோப்பிநாய்க்கன்பட்டியிலும், இன்னும் இவைபோல பல விடங்களிலும் சொந்தப்பணத்தில் பாடசாலைகள் நடைபெறுவதைப் போலவும், ஒவ்வொருகிராமங்கள்தோறும் கல்விச்சாலைகள் ஏற்படுத்தி இந்நகரம் தெற்குவாசலில் ஏற்படுத்தி இருப்பதைப்போல, கட்டாயமாயும் இலவசமாயும் நம் குல சிறுவர் சிறுமிகளுக்கு கல்வி கற்கும்படியும் செய்வீர்களே யானால், நம்முடைய குறைகளெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல நீங்குமென்பது சாதம்.

நாடார் மகாஜன சங்கத்திலிருந்தும், விருதுநகர்வாசிகளின் தூத்துக்குடி, மதுரை, மகமைகளிலிருந்தும் சொந்தத்தில் விருதுநகர் வாசியான காலஞ்சென்ற மகா-ா-ா-ஸ்ரீ சி. த. சங்கரலிங்க நாடார் அவர்களின் தூத்துக்குடி துலை ஆபீஸ் வரும்படியிலிருந்தும் நம்குல மாணவர்களுக்கு "ஸ்காலர்ஷிப்" கொடுத்து வருவதைப்போல், ஒவ்வொரு ஊர்களிலும் அந்தந்த ஊர் ஏழை மாணவர்களுக்கு பணம் உதவிசெய்து ஆதரித்து நம்மவர்களின் கல்வியை அபிவிருத்தி செய்து நம்குலக் குறைகளை நீக்குவதுடன் நம்குலமும் மேம்பாடடையச் செய்யும்படி பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய வியாபாரம், விவசாயம் முதலிய வேலைகளோடு, நம்மிந்தியாவில் நடைபெற்று வரும் கைத்தொழிற்சாலைகளுக்கு நம்மாணவர்களை அனுப்பி அநேகவித கைத்தொழில்கள் கற்றுவரும்படி செய்து, தொழிற்சாலைகள் ஏற்படுத்தி தக்க லாபம் சம்பாதிப்பதோடு நம்முடையவர்களுடைய குறைகளை நீக்கி அந்த வகையில் முன்னேற்றம் அடையும்படி செய்யலாம். ஆகையால், நாம் கல்வியையும் கைத்தொழிலையும் விருத்தி செய்வோமே யானால் சீக்கிரம் முன்னேறி வரலாம்.

இந்த சந்தர்ப்பத்தில் பத்திரிகையின் பிரயோஜனத்தை நாம் மறந்துவிட முடியாது. நம்குலப் பத்திரிகைகள் ஆங்காங்கு நடக்கும் நம்மவர்களின் விஷயங்களைத் தாங்கிவருவதுடன், நம் மகாஜனங்களின் முன்னேற்றத்திற்கு மிகவும் உதவியாயிருக்கின்றன வென்பது குறிப்பிடற்பாலது. இப்போது நம்மவர்களின் நன்மைக்காகவே நடைபெற்று வரும் "நாடார்குல மித்திரன்" "க்ஷத்திரிய மித்திரன்" "நாடார் நண்பன்" முதலிய பத்திரிகைகள் நமது ஜனசமூகத்திற்கு அரிய வேலைகள் செய்து வருகின்றன வென்பது நீங்கள் எல்லோரும் அறிந்த விஷயமே. இதைப்போல இன்னும் அநேக பத்திரிகைகளை நம்மவர்களுக்காக நடைபெறச் செய்து ஆதரித்து வரும்படியாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

வியாபாரம்.

நம்மில் அநேகர் வியாபாரிகளா யிருப்பதால் வியாபாரத்தைப்பற்றி அதிகமாகச் சொல்லத் தேவையில்லை. வியாபாரத்திற்கு ஒற்றுமை அத்தியாவசிய மானது. ஒற்றுமை இல்லாத குறையினால் பலருக்கும் கஷ்டம் ஏற்படுவதோடு நஷ்டமும் உண்டாகிறது. இன்னும் நம்முடை வியாபாரத்தில் கணக்கு வைத்திருப்பது கவர்ன்மெண்டார்கள் நம்மை வருமான வரிக்காக கேட்கும் கணக்கு சரியானதாயில்லை. அவர்களுடைய சட்டங்களுக்கு சரியானபடி கணக்கு நம்மிடமில்லாத குறையினால் அதிகக் கஷ்டம் விளைகிறது. ஆகையால் கவர்ன்மெண்டாரவர்களின் கணக்குப்படியும் தமிழ் போக்கின்படியும் நமது கணக்குகளை திருத்தி அமைத்துக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்வோமானால் "இன்கம் டாக்ஸ்" என்ற வருமான வரி விஷயமாய் ஏற்படும் தொல்லைகள் நீங்கி ஒழுங்கான கணக்குகளை நாம் வைத்திருப்பதோடும் கவர்ன்மெண்டா ரவர்களும் சரியானபடி கணக்கை முடித்துக் காண்பித்து விடுவதுடன் அந்தக்கஷ்டமும் கழிந்துவிடும். அதற்காக பள்ளிக்கூடங்களில் ஏற்பட்டிருக்கும் "புக் கீப்பிங்" "கமெர்ஷியல் கரஸ்பான்டென்ஸ்" "டைப்ரைட்டிங்" முதலிய பாடங்களை நம் மாணவர்கள் படிக்கும்படி செய்வதுடன் நம்முடைய கலாசாலைகளிலும் அந்தப் பாடங்களை

ஏற்படுத்தி மணவர்களுக்கு கற்றுக்கொடுக்கும்படி செய்து நம்முடைய வியாபாரங்களை பல வழிகளிலும் விசாலப்படுத்தி தனவந்தர்களாகி சுகஜீவிகளாய் இருக்கும்படியாய் கேட்டுக் கொள்கிறேன்.

நமது "நாடார் பாங்கு"

இப்போது தூத்துக்குடியில் ஏற்பட்டு நடந்துவரும் நமது நாடார் பாங்கின் ஆதியிலிருந்த சுறுசுறுப்பு காலாவட்டத்தில் குறைந்து வருகிறது. மூலதனம் அதிகப்படுவதுடன் விசேஷ லாபம் கிடைப்பதற்கும் இடமில்லாமல் போகிறது. ஆகையால் நம்மவர்கள் ஒவ்வொருவரும் நமது பாங்கில் கூடுதலான பங்குகள் எடுத்து இப்பொழுதிருக்கும் மூலதனத்தை ரிஜிஸ்டரான மூலதனமாகிய இருபது லக்ஷமாக ஆக்கிவிடுவோமேயானால், அநேக தொழிற்சாலைகள் ஏற்படுத்தி தொழிலற்றிருக்கும் நம் ஏழைகளுக்கு தொழில் முறை ஏற்படுத்துவதுடன், நமது கைத்தொழில் விருத்தி செய்வதோடு, வியாபார விருத்திக்கும், ரொக்க லேவாதேவிக்கு கொடுத்து உதவுதலுக்கும், நெற்றி வேர்வை நிலத்தில்விழ சம்பாதித்த நம் ஏழை மக்களின் பணம் பலவிடங்களில் கொடுக்கப்பட்டு சிதறுண்டு போகாமல் நமது பாங்கில் பாதுகாப்புடன் இருப்பதற்கும் உபயோகமாவதுடன் தக்க லாபமும் கிடைக்கும். ஆகையால் ஆங்காங்குள்ள நம்மவர்களும், பிரசாரகர்களும், குலாபிமானிகளும், நம் நல பத்திரிகைகளும் நமது பாங்கின் அபிவிருத்திக்கான முயற்சிகள் செய்தல் வேண்டும். நமது பாங்கில் கூடுதலான பங்குகள் எடுத்து அதை ஆதரிக்கும்படியாய் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(இன்னும் வரும்.)

பந்தயம் ஆயிரம் ரூபாயாம்.

(பாலபாஸ்கரன், சொ. ஆ. சொக்கலிங்கப் பாண்டியர், அருப்புக்கோட்டை.)

சேலம் அர்த்தநாரீச நாயக்கர் தமது க்ஷத்திரியன் 1924-7-23௳ பத்திரிகையின் 2-வது பக்கத்தில பந்தயம் ஆயிரம் ரூபாய் கட்டவேண்டுமென்று நமது க்ஷத்திரியமித்திரன் அதிபர் அவர்களைக் கேட்கின்றார்.

குருகுலமன்னரைப் பற்றியும் சான்றாரைப் பற்றியும் விவாதம் நடக்கும்முன் இருவருடைய வாதங்களையும் இரண்டு பத்திரிகைகளிலும் வெளியிட வேண்டுமென்று கனம் கிராமணியவர்கள் தெரியப்படுத்தியதற்கு, யாதொரு பதிலும் எழுதாமலும் கிராமணியவர்கள் எழுதும் வாதங்களை தமது பத்திரிகையில் பூர்த்தியாய் பிரசுரஞ் செய்யாமலும், தாம் கூறியபடியாவது இருவருடைய வாதங்களும் நடக்கும்போது மற்றொருவர் குறுக்கிடக் கூடாதென்றும், நியதியைக் கடந்து, குருகுலமன்னர் பக்ஷமாய் மற்றொருவர் புகுந்து விவாதிக்கும்படி தமது பத்திரிகையிலேயே இடங்கொடுத்தும் தமது குலத்தின் குணத்தை வெளிப்படுத்திக்கொண்ட நாயக்கர், பந்தயம் கட்டுகிறாராம். இதுவென்ன வேடிக்கை? நடக்கும் விவாதங்களை நமது பத்திரிகையில் பிரசுரஞ் செய்து உண்மையை வித்துவான்கள் அறிவதற்கு இடங்கொடுத்தல்லவா? பிறகு பஞ்சாயத்தார்கள் முடிவுக்குப் போகவேண்டும். பத்திரிகையில் இருவர் வாதங்களையும் பிரசுரஞ் செய்தால், தமது குலத்தவர்களை ஏமாற்றிப்பணம் பறித்துப் பிழைக்க முடியாதென்பதை யறிந்துதான், நாயக்கர் இவ்விதஞ் செய்கிறாரென்பதை அநேகர் அறிந்திருக்கிறார்கள்.

நாயக்கரே! சொன்னபடி நடக்கக்கூடியவர் தானென்பதை உறுதிப்படுத்தி உலகம் ஒப்ப முன் வரவேண்டுமானால், முதலாவது உமது பத்திரிகையில் இது முதலாவது க்ஷத்திரிய மித்திரன் பத்திராதிபர் வெளியிடுவது போல, இருவர் வாதங்களையும் வெளியிடுவீரால், பந்தயம் கட்டுவதிலாவது பின்வாங்க மாட்டீரென்பதை உலகம் நம்பும். இதோடு மறுத்து மேற்கோள் காட்டும் நூல்களிலும் இன்ன இடத்தில் இன்னபடி சொல்லியிருக்கிறதென்பதையும் தெளிவாய் வெளியிடவேண்டுமென நம்புகிறேன். சும்மா வெறும் பல்லிளிப்பாகவே குறிக்கொண்டு சொல்லித் தப்பித்துக்கொள்ளப் பார்க்காதேயும். அதை உலகம் ஒப்பாதென்பதை திடமாயறிந்துகொண்டு நடப்பீராக.

குறும்பர்குல ஆராய்ச்சி.

14—5—1924-ல் சேலம், க்ஷத்திரியனில் வெளியானது.

(முன்தொடர்ச்சி.)

நியாயவாதியின் தீர்மானம்.

மன்னர் பாங்கிற் பின்னோ ராகுப ... 30

'மன்னர் பின்னோர்' என்ற பன்மையான் முடியுடையோரும் முடியில்லாதோரும், உழுவித்துண்போரும், உழுதுண்போருமென மன்னரும் வேளாளரும் பலரென்றார் என்று விசேடவுரை கூறினர். முடியுடையோர் பெருநில மன்னர், முடியில்லாதோர் குறுநில மன்னர் மேற்படி இரு பிரிவுகளும் குலத்தாலன்றி நிலையாலென்பது கிராமணிக்கு ஏன் படவில்லை? என்றார்.

எமது முடிவுரை.

நமது நச்சினார்க்கினியர் "முடியுடையோர், முடியில்லாதோர்" எனப் பகுத்துக் கூறினரேயன்றி, முடியுடையோர் பெருநில மன்னர் எனவும், முடியில்லாதோர் குறுநில மன்னர் எனவும் அச் சூத்திரத்தின் கீழுரையில் பொருளெழுதியுள்ளாரா? இல்லையே! அப்படியிருக்க முடியில்லாதோரை நம் பள்ளிப்புலவர் தோளில் தூக்கிவைத்துக்கொண்டு குறுநில மன்னர் எனக் கூத்தாடுவதால் பயனென்னை? அப்படி முடியில்லாதோர் குறுநில மன்னராகவே யிருப்பினும், அவர்கள் அரசவம்சத்தவராவரோ? வேளாளரும் "வேள்" எனவும், "அரசன்" எனவும் உரிமைப்பெயரை பெற்றிருந்தாரென அவர் தெரிவித்த சூத்திரத்தின் கீழுரையிலேயே விளக்கப்பட்டிருத்தலை இங் கறிவிப்பாம். "அவருள் உழுவித்துண்போர் மண்டலமாக்களுந் தண்டத் தலைவருமாய்ச் சோழநாட்டுப் பிடவூரும் அழுந்தூரும் நாங்கூரும் நாவூரும் ஆலஞ்சேரியும் பெருஞ்சிக்கலும் வல்லமும் கிழாரும் முதலிய பதியிற்றோன்றி வேளெனவும், அரசெனவும் உரிமையெய்தினோரும், பாண்டியநாட்டுக் காவிதிப்பட்டமெய்தினோருங் குறுமுடிக் குடிப்பிறந்தோர் முதலியோருமாய் முடியுடைவேந்தர்க்கு மகட்கொடைக்கு உரிய வேளாளராம்." என நச்சினார்க்கினியர் அச் சூத்திரத்தின்கீழ் விசேஷவுரை கூறியுள்ளார். அவ்வுரையுள் வேளாளர் மண்டலமாக்களும், தண்டத்தலைவருமாயிருந்து "அரசன், வேள்" என்னும் பெயர்களைப் பெற்றிருந்தாரென்பதையுமறிந்து, குறுநில மன்னராகிய வேடர்கள் "மன்னர், அரசர்" என்னும் பெயர்களைப் பெற்றிருந்தாரெனப் பூச்சிக்காட்டுதலை நமது கொண்டாடும் புலவர் விட்டொழிப்பாராக. அன்றியும், குறுநில மன்னராகிய குறும்பர் பெருநிலமன்னரும் அன்றாம் முடியில்லாதோரே! அவர்க்கு, தொல்காப்பியம், மரபியலில் "வில்லும் வேலுங் கழலுங் கண்ணியுந், தாருமாலையுந் தேரும் வாளும்" உரியதெனக் கூறப்பட்டுள்ளதேயன்றி, முடியும் உரியதெனக் கூறப்பட்டில்லையெனவறிவர். குறுநில மன்னர் என்பார் குறுகியநிலமாளுதலையால் ஏற்பட்டப் பெயரெனக் கொள்ளின், அதனோடு ஒருபொருட்கொண்ட 'குறும்பர், அரட்டர், வேளிர், புரோசர்" என்னும் பெயர்களுங் குறுகிய நிலத்தை விளக்கவேண்டும். அப்படி விளக்காமையால் அப்பெயர்கள் பாலையில்வாழ் சிலரையே தெரிவிக்குமெனவறிவர்.

நியாயவாதியின் தீர்மானம்.

'ஓதல் பகையே தூதிவை பிரிவே' என்னும் இவ்வகை சூத்திரத்தில் பிரிவுமூன்றுவகையாய்க் கூறி, அவற்றுள்,

ஓதலுந் தூது முயர்ந்தோர்மேன ... 26

என்னும் சூத்திரத்தில் ஓதற்பிரிவையும், தூதிற் பிரிவையும் அந்தணர் முதலிய மூவர்க்கும் உரித்தாக்கி, ஒழிந்துநின்ற பகைவயிற் பிரிவை அரசர்க்கே உரியதெனக் காட்ட அடுத்த சூத்திரஞ் சொல்லப்படுகின்றது.

தானே சேறலுந் தன்னொடு சிவணிய
ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே ...27

மேற்படி சூத்திரத்தில் அரச வம்சத்தாரே

பகைவயிற் பிரிவிற்குடையரென்று சொல்லு கின்றார். சூத்திரத்தின் உரையை முழுவதும் இங்கு எழுதுகின்றோம்.

உரை.

[இது பகைவயிற் பிரிவு அரசர்க்கே உரித் தென்கின்றது.]

(இ-ள்,) தானே சேறலும்-தன் பகைக்குத் தானே செல்லுதலும், தன்னொடு சிவணிய வேனோர் சேறலும்-அவனொடு நட்புக்கொண்ட ஒழிந்தோர் அவற்குத் துணையாகிச் செல்லு தலுமாகிய இருபகுதியும், வேந்தன் மேற்றே-அரசன் கண்ணது. (எ-று.) எனவே, வணிகர்க் கு உரித்தன்றாயிற்று, தானே என்று உரிமை கூறிய அதனாலே முடியுடைய வேந்தர் தாமே சேறலும், ஏனோரெனப் பன்மை கூறிய அத னாலே பெரும்பான்மையும் குறுநில மன்னர் அவர்க்காகச் சேறலும், முடியுடை வேந்தர் அவர்க்காகச் சிறுபான்மை சேறலும் உணர்க. முடியுடை வேந்தர் உள்வழிக் குறுநில மன்னர் தாமே சொல்லாமையுணர்க. இதனை வேந்தர்க் குற்றுழியென்ப. ஏனையோர் அவ்வேந்தர் இல் வழிக் குறுநில மன்னரும் தாமே சேறல் 'வேந் துவினை யியற்கை' என்பதன்கட் கூறுப. இத னாலே தன்பகை மேலும் பிறர் பகை மேலும் ஒரு காலத்திற் சேறலின் என்றார்.

மேற்படி சூத்திரத்தால் பகைவயிற் பிரிவு வேந்தர்க்கே யெனவும் அவர்க்கடுத்து வணி கர்க்கும் மேற்பட்ட அந்தணர்க்கும் அப்பிரிவு இல்லையெனவும் ஆகின்றது. கிராமணி இலக் கணத்தின்படி காட்டில் வாழும் கிராதர்க்கும் அது கூடலாமென்பதாம். ஏனெனில் கிராமணி கிராதர் இவர்கட்குச் சொல்லொற்றுமையிருத் தல்பற்றி அவர் அவ்விதம் கொண்டார் போலும். குறுநில மன்னர்க்கும் வேடர்க்கும் ஆகாசமும் பாதாளமும்போல் ஏற்பட்ட வித்தி யாசம். நமது கிராமணி கண்ணுக்கும் உணர் வுக்கும் ஏனோ எட்டவில்லை? அவர்க்குத்தான் எட்டாமல் எழுதுகிறாரென்றால் அவர் வார்த் தையை நம்பிக்குதிக்கும் அவர் குலத்தவர்க் கும் ஏன்எட்டவில்லை? எல்லார்க்கும் ஒரு சங்கு தானே! இனி 'வேந்துவினை யியற்கை' என் னும் சூத்திரத்தில் தொல்காப்பியனார் கருத் தையறிதல் அவசியம். முடிவேந்தர் இலக் கணம் பல குறுநில மன்னர்க்கும் உண்டென இச்சூத்திரம் காட்டுகின்றது.

வேந்துவினை யியற்கை வேந்தனி னொரீஇய
வேனோர் மருங்கினு மெய்திட னுடைத்தே(32)

என்பது சூத்திரம். இதன் உரையையும் அப் படியே கண்டு எழுதுகின்றோம்.

இது மலய மாதவன் நிலங்கடந்த நெடுமுடி யண்ணலுழை நரபதியருடன் கொணர்ந்த பதி னெண் வகைக் குடிப்பிறந்த வேளிர்க்கும் வேந்தன்றொழில் உரித்தென்கிறது.

(இ-ள்.) வேந்துவினை இயற்கை-முடியுடை வேந்தர்க்குரிய தொழிலாகிய இலக்கணங்கள், வேந்தனின் ஒரீஇய ஏனோர் மருங்கினும்எய்து இடன் உடைத்து-அம்முடியுடை வேந்தரை யொழிந்த குறுநில மன்னரிடத்தும் பொருந் தும் இடனுடையது. (எ-று.)

அவர்க்குரிய இலக்கணமாவன (கிராமணி கவனிக்கட்டும்.):—தன் பகைவயிற் தானே சேறலும் தான் திறைபெற்ற நாடு காக்கப் பிரி தலும், மன்னர் பாங்கிற் பின்னோரெனப்பட்ட வேளாளரை ஏவிக்கொள்ளுஞ் சிறப்புமாம்.

வேளிர்க்கும் வேந்தன்றொழில் உரித்து.குறு நில மன்னர்க்கும் வேந்தனுக்குரிய மேற்படி மூவகை இலக்கணம் இச்சூத்திரத்தாலும் உரையாலும் நன்றாய் விளங்குகின்றது. காக் கையின் கண்ணுக்குப் பீர்க்கம்பூ பொன்னிறம் என்பது போல கிராமணியின் அறிவுக்கு அவ் வித பெருமையுடையவர் கிராதர் எனவே தோன்றுகின்றது. என்னசெய்யலாம்! அறிவுக் கும் தவம் வேண்டாமா? அடுத்த சூத்திர விசாரணையும் அவசியமாகும். என அப்பா விப்புலவர் ஒன்றுமில்லாத விஷயத்தை ஒன் பது முழம் நீளத்தில் நீட்டியுள்ளார்.

எமது முடிவுரை.

"ஓதல் பகையே தூதிவை பிரிவே"
"ஓதலுந் தூது முயர்ந்தோர் மேன"
"தானே சேறலுந் தன்னொடு சிவணிய
வேனோர் சேறலும் வேந்தன் மேற்றே"

என்னும் தொல்காப்பிய, அகத்திணையியலில்

வரும் 25, 26, 27-வது சூத்திரங்களைக்கூறி, அவற்றில் வெளிப்படும் ஓதலும், தூதும், பகைமேற் செல்லுதலும், ஆகிய மூன்றனுள் ஓதற்பிரிவையும், தூதிற்பிரிவையும் அந்தணர் முதலிய மூவர்க்குரித்தாக்கி, ஒழிந்துநின்ற பகைவயிற் பிரிவை அரசருக்கே யுரித்தெனக் காட்டி, அடுத்து;

"வேந்து வினையியற்கை வேந்தனி னொரீஇய
வேனோர் மருங்கினு மெய்திட னுடைத்தே"

என்னும் தொல்காப்பியம், அகத்திணையியல், 32-வது சூத்திர விசேஷ உரையில் * "மலையமாதவன் நிலங்கடந்த நெடுமுடியண்ணலுழை நரபதியருடன்கொணர்ந்த பதினெண்வகைக் குடிப்பிறந்த வேளீர்க்கும் வேந்தன்தொழில் உரித்தென்கிறது." எனக் கூறிய இவற்றில் பகைமேற் செல்லுதல் குறுநில மன்னருக்கும் உரித்தென்பதால், குறுநிலமன்னரையும் அரசரெனக்கூற ஆசைப்படுகின்றார். குறுநில மன்னர் வேந்தர் உள்வழிதாமே செல்லாமையும், வேந்தர் இல்வழியே குறுநிலமன்னர் தாமே சேறலும் உரித்தென்பதால்; குறுநில மன்னராகிய குறவர் அரசர்பேரில் சண்டைக்கேகாரெனவும், குறுநில மன்னராகிய குறவர்பேரிலேயே சண்டைக்கேகுவரெனவும் விளங்குகின்றது. இவற்றை மெய்ப்பிக்க ஜீவகசிந்தாமணியில் குறும்பனுடைய கட்டியக்காரனோடு, வேடர்கள் சண்டைசெய்ததை இங்கு குறிப்பிடத்தக்கது. சீவகசிந்தாமணி 1221-வது செய்யுளில் கட்டியக்காரனை "அரட்டன்" என்றும், 421, 436-வது செய்யுள்களில் விளங்கும் வேடரையே, 1079-வது செய்யுளில் "குறும்பர்" எனக் கூறப்பட்டிருத்தலையும் நமது பள்ளிப்புலவர் பார்ப்பாராக.

தொல்காப்பியத்தில் நச்சினார்க்கினியர் அரசரையும் வேளிரையும் வெவ்வேறு சாதியாரென விளக்கவே "நரபதியருடன் கொணர்ந்த 18-குடியிலுட்பட்ட வேளிரென்றார்" அன்றியும், 32-வது சூத்திர உரையின்கீழ் "வேந்தனெனப்பெயர் கூறுமையின், தானே குறுநில மன்னர் சென்றதாம்" என்பதால், வேந்தரும் வேளிரும் வெவ்வேறு குலத்தவரென வறிவர்.

* தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சிறப்புப்பாயிர உரையின்கீழும் காண்க.

28—5—1924-ல் சேலம், க்ஷத்திரியனில் வெளியானது.

நியாயவாதியின் தீர்மானம்.

பொருள்வயிற் பிரிதலு மவர்வயி னுரித்தே
உயர்ந்தோர் பொருள்வயி னொழுக்கத் தான.

இஃது அக்குறுநில மன்னருக்குப் பொருள்வயிற் பிரிதலும் ஓதற்பிரிதலும் உரியவென்கின்றது. (இது அவதாரிகை.)

(இ-ள்) பொருள் வயினும்-தமக்குரிய இறையாகப் பெறும் பொருளிடத்தும், உயர்ந்தோர் ஒழுக்கத்துஆன பொருள் வயினும் - உயர்ந்த நாலவகை வருணத்தார்க்குரிய ஒழுக்கத்திலேயான ஓத்திடத்திலும், பிரிதல் அவர் வயின் உரித்து-பிரிந்து சேறல் அக்குறுநில மன்னரிடத்து உரித்து. (எ-று)

ஓதற்பிரிவும், பொருள்வயிற் பிரிவும் குறுநில மன்னர்க்குமுண்டு என்பது திரண்ட பொருள். ஓதுதல் முதல் மூன்று வருணத்திற்குமட்டும் கடமையாயுரியது. காட்டிலுள்ள வேடர்க்கு அஃது ஒழுக்கமென எங்கேனும் நூல்கள் சொல்லியிருக்கின்றனவா? ஓரிடத்துமில்லை. நான்காம் வருணத்தவராகிய வேளாளர்க்கே ஓதுதல் அநுபந்த தொழிலாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. கடமையாய்ச் சொல்லப்படவில்லை. அகவொழுக்கத்திற்குரிய ஓதற்பிரிவு வேளாளர்க்கில்லையென்றே தொல்காப்பியனார் 26-வது சூத்திரஞ் செய்தார். அப்படியிருக்க காட்டில் வாழும் வேடர்க்கு அவ்வித இலக்கணம் எப்படி யேற்கும்? இத்தனையும் குறுநில மன்னர்க்கும், குறுஞ்சிநில வேடர்க்கும் வித்தியாச மறியாமல் வெள்ளறிவால் எழுதிய துவிபரீதமாகும். நுட்பமாய்அறிந்துகொள்ளும் சக்தி நமது கிராமணிக்கில்லாததால் அவர் புத்திக்குப் படும்படி பன்னிப்பன்னி சொல்லவேண்டியது நமது கடமையாயிற்று. குறுநில மன்னர் வேறு, குறிஞ்சி நிலத்தார் வேறு என்பதற்குப் புறத்திணையியலிலுள்ள சில உரைகளை இங்கு காட்டுவோம் என்றார்.

எமது முடிவுரை.

இவற்றில் அப்பள்ளிப்புலவர் "ஓதற்பிரிவு

பொருள்வயிற் பிரிவும் குறுநில மன்னருக்கு உண்டு எனவும், ஒன்று முதல் மூன்று வருணத்தோர்க்கும் கடமையாயுரியது. காட்டினர். வேடர்க்கு அஃது ஒழுக்கமென வகைக லும் அவர்கள் சொல்லியிருக்கின்றனரா வென்னும், நான்காம் வருணத்தவராகிய வேளாளருக்கோ முதல் அறுபத்தொன்பதிற் சொல்லப்பட்டிருக்கிறது. கடமையாய்ச் சொல்லப்படவில்லை என்றும் அறைகிறார். கடமையாய சொல்லப்படாவிடினும் வேளாளர் குறுநிலமன்னரினும் மேலாகவென்று மதிக்கப், நால்வகை வருணத்தாரில் வேளாளரையும் உட்படுத்தி "உயர்ந்தோர்க் குரிய வோத்தினான" (31-சூ) எனவும், "உயர்ந்தோர் பொருள்வயிற்" (33-சூ) எனவும் கூறியிருத்தலின் வேளாளர் உயர்ந்தோரும், குறுநிலமன்னர் தாழ்ந்தோருமாவர். வேளாளரை உயர்ந்தோர் எனக் கூறிய நச்சினார்க்கினியர் குறுநிலமன்னரையுமுயர்ந்தோர் எனக் கூறினரில்லை. வேளாளருக்குக் கூறிய ஓதற்பிரிவை, குறுநில மன்னருக்கு புறனடையாகக்கூறப்பட்டது. அதனால் வேளாளர் உயர்ந்தோரும், குறுநிலமன்னர் தாழ்ந்தோருமாவர். அத்தகையோரை அரசரோடு எண்ணப்படுவது எங்ஙனம்? குறுநிலமன்னர் வேடராயினமையினாலேயே வேளாளருக்குக்கீழ் எண்ணப்பட்டது. இதை யறியாது அரசராகிவிடலாமென்னும் விபரீதபுத்தியைக்கொண்டு வேடம் போட்டாடுகின்றார். இவர் தகப்பனுருக்கில்லாத பூணூலை இவர் மாட்டிக்கொண்டார். இவர் தகப்பனுருக்கில்லாத "வர்மா" பட்டத்தை இவர் சூட்டிக்கொண்டார். தாடியை விட்டுக் கொண்டு, காவித்துணியைக் கட்டிக்கொண்டு ஆடுகிறார் ஒண்குடைகையில் ஆட்டம். நல்லவிசி கோலமாக. இக் குறுநிலமன்னரின் தன்மை விளக்கிய நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணி 421, 436, 1079-வது செய்யுள்களின் உரையில் வேடரும் குறுநிலமன்னரும் ஏககுலத்தவரென்கின்றார். அத்தகைய குறும்பரை "தென்னூலாசமன் கறுப்புநாயை வெள்ளைநாயாக்கியதைப்போல" அரசராக்கப்பார்க்கிறார். அது முடியாதகாரியம். குறுநிலமன்னர் வேறு, குறிஞ்சிநிலத்தார் வேறு எனக் கூறும் அவரது வாக்கை மாற்றி, இனி ஒன்றெனக்கூறப் பார்ப்பாராக. அவர் சாதிக்குரிய பள்ளி என்னும் பெயருக் கக்குலத்திற்குரியதென நிகண்டைக் கொண்டு சோதித்துப் பார்க்கட்டும். அது குறிஞ்சிநிலப்பெயராம். அந்நில வாசிபெனத்தான் யாமுங் கூறுகின்றோம். வேறு பாதகமொன்றும் யாம் சொல்லவில்லை என அறிவர்.

நியாயவாதியின் தீர்மானம்.

புறத்திணையியல்.

வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்

* * *

மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற்
றாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்
ஆரமரோட்டலும் ஆபெயர்த்துத் தருதலும்

* * *

என்றிருமூன்று வகையிற் கல்லொடு புணரச்
சொல்லப்பட்ட வெழுமூன்று துறைத்தே

என்னும் 60-வது சூத்திரத்திலுள்ள குறிப்புகளை நமது கிராமணி நன்றாய்ப் படித்துப்பார்க்கட்டும். மேற்படி குறிப்புகளை அடியில் எழுதுகின்றோம்.

'மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பில்' மன் எனப் பொதுப்படக் கூறியவதனான் நெடுநில மன்னர்க்கும் குறுநில மன்னர் முதலியோர்க்குங் கொள்க.

ஆரமரோட்டலும் - குறுநில வேந்தரும் காட்டகத்துவாழும் மறவரும் போர்த்தொழில் வேந்தரைப் பொருது புறங்காட்டலும்.

ஆபெயர்த்துத் தருதலும் - வெட்சி மறவர் கொண்ட நிரையைக் குறுநில மன்னராயினும் காட்டகத்து வாழும் மறவராயினும் மீட்டுத் தருதலும்.

மேற்படி குறிப்புரைகளில் முன்னர் மன்னென்பதன் உரையில் மன்னர் இருவகையென்பதனைக் காட்டி பின்னர் இரண்டடிகளின் உரைகளில் குறுநில மன்னர் வேறு கானக மறவர் வேறு எனக் கூறியிருந்ததைக் காட்டினோம். அம்மன்னர் 'நெடுநில மன்னர் குறுநில மன்னர்' என இருவிதமாய் அக்காலத்தில் வழங்கப்பட்டதையும் காட்டினோம். நெடுநில

மன்னர், குறுநில மன்னர் என்னும் சொற்களாலேயே அச்சொற்கள் பதவிகளைக் குறிக்கின்றன என்பது விளங்கவில்லையா? அகன்ற பூமியை ஆள்பவன் நெடுநில மன்னனென்பதும், குறுகிய பூமியை ஆள்பவன் குறுநில மன்னனென்பதும் கிராமணிக்கு விளங்கவில்லை. குறும்பு-நில-மன்னன் அதாவது குறிஞ்சி நிலத்தான் என்றுதான் அவருக்குப் படுகின்றது. அதற்குமேல் அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவர்தான் அப்படியென்றால் அவரது குலத்தவர்களாகிய அவரது சீடர்கட்கும் அப்படித்தான் விளங்குகின்றது. என்ன புலமை! முற்றி நெடுநிலம், குறுநிலம் என்னும் இரண்டு சொற்களையும் நன்றாய் இலக்கணம் கற்றுக் கொண்டபின் இவர் வாதத்திற்கு வந்தால் வாதம் ஒருவாறு நடக்கும். கிராமணி இதனை ஒத்துக் கொள்கின்றாரா? இல்லையா? ஓதட்டும் என்றார்.

எமது முடிவுரை.

இவைவரைக்கும் எமது பள்ளிப்புலவரின் பகட்டுரையாகும். இவற்றில் "மன் எனப் பொருள்படக் கூறிய வகையன் நெடுநிலமன்னர்க்கும், குறுநில மன்னர் முதலியோர்க்குங் கொள்க" என நச்சினார்க்கினியர் கூறியவாசகத்தை வெளிப்படுத்தி, குறுநிலமன்னரை மன்னரோடு சேர்க்கப்பார்க்கிறார். அப்பகுதியின் கடைசியிலுள்ள "குறுநில மன்னர் முதலியோர்" என்னும் பகுதியைக் கவனிக்கவில்லை. "முதலியோர்" என்பது குறுநிலமன்னரோடு, அம்மன்னர் தன்மையைப் பெற்றுள்ள வேளாளர், பரவர் முதலியோரையும் உளப்படுத்தற்கென்க. "மன்னர் பாங்கின்" என்னும் 63-வது சூத்திரத்தின் கீழுரையில் வேளாளரும் அரசரென வெளிப்படுதலாலும்; "தென் பரதவர் மிடல் சாய" என்னும் புறநானூறு, 378-வது அகவலால் பரதவரும் குறுநில மன்னராதலாறு மென்க. ஆகவே மன்னர் என்னும் பெயராலேயே மயங்குதல் கூடாது. "The Varnais of Malabar are also Called Mannan." (Vid) The Castes and Tribes of Southern India, Vol. VII, P. 318. "மலையாளத்திலுள்ள வண்ணார் மன்னர் என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றனர்" என்பதால் மன்னரின் தன்மையைக் கண்டு நமது குறுமன்னர் அடங்குவாராக.

அன்றியும், நெடுநில மன்னர் எனக் கூறி, அவர்க்கடுத்தது குறுநில மன்னர் எனக் கூறியிருத்தலின், கோட்டையைப் பிடித்துவிட்டதைப்போல் ஆரவாரமிட்டு "மன்னர் நெடுநில மன்னர் குறுநில மன்னர் என இருவிதமாய் அக்காலத்தில் வழங்கப்பட்டதையும் காட்டினோம். நெடுநில மன்னர், குறுநிலமன்னர் என்னும் சொற்களாலேயே அச்சொற்கள் பதவிகளைக் குறிக்கின்றன என்பது விளங்கவில்லையா? அகன்றபூமியை ஆள்பவன் நெடுநிலமன்னனென்பதும், குறுகிய பூமியை ஆள்பவன் குறுநில மன்னனென்பதும் கிராமணிக்கு விளங்கவில்லை." என ஒப்பாரியிடுகின்றார். நெடுநில மன்னரும், குறுநிலமன்னரும் ஏககுலத்தவராயிருப்பின் "மன்பெருமாசி வேந்தரை" என நச்சினார்க்கினியர் கூறுவானேன். இப்பகை மன்னரோடு சேராமையாலன்றோ அக்குறுநிலமன்னரை ஏனோர் என்றனர். ஏனோர் என்பதற்கு குறுநிலமன்னர் எனப் பொருள்விரித்த நச்சினார்க்கினியரும் சீவகசிந்தாமணியில் (2567-68) சீவகனை வளர்த்த கந்துக்கடன் நாட்டைப் பெற்று, அவனாசளித்தது "முடியுடை வேந்தராகுந் தன்மையின்றாயினும், குறுநிலமன்னர்க்குரிய அரசாயிற்று" என விளக்குகின்றார். இவ்வாறு உரையாசிரியராகிய நச்சினார்க்கினியரின் அபிப்பிராயமும் முடியுடைய மன்னர் வேறு, குறுநில மன்னர் வேறு என்பதேயாம். இதை வற்புறுத்தவே சீவகசிந்தாமணியில் திருத்தக்க தேவர் 19[illegible]-வது செய்யுளில் கூறிய குறுநிலமன்னராகிய குறும்பரை நமது நச்சினார்க்கினியர் வேடர் என உரை எழுதியிருக்க, அவரே அவ்வுரைக்கு மாறாக தெலுங்குவாய வுரையில் அரசரெனக் கூறுவாரா? எமது பள்ளிப்புலவர் குறுநிலமன்னரை குறுகிய பூமியையுடைய அரசரெனக் கொள்ள இஷ்டப்படுவாரேல், அக்குறுநிலமன்னரோடு ஒன்றுபட்டப் பரியாயப் பெயர்களை

கிய "ஆரட்டர், குறும்பர், வேளிர், புரோசர்" என்னும் பெயர்களிலும் குறுகிய நிலத்தை அடக்கி விளக்கிக் காட்டுவாராக. இன்றேல் குறுநிலமன்னரை குறவரெனக் கொண்டகங் களிப்பாராக.

"ஆர் அமர் ஓட்டலும்=குறுநில வேந்தரும், காட்டகத்து வாழும் மறவரும் போர்த்தொழில் வேந்தரைப் பொருது புறங்காட்டலும்

ஆபெயர்த்துத் தருதலும்=வெட்சி மறவர் கொண்ட நிரையைக் குறுநில மன்னராயினும், காட்டகத்து வாழும் மறவராயினும் மீட்டுத் தருதலும்" என நச்சினார்க்கினியர் எழுதிய உரையை வெளிக்கெழுக்க. குறுநில மன்னர் வேறு, கானக மறவர் வேறு எனக் கூறுகின்றனர்.

இவற்றில் வரும் "மறவர்" என்பது "வேடர்தம் பெயரும் வீரரு மறவர்" என்னும் பிங்கல நிகண்டால் வேடரையும், படைவீரரையுங் குறிப்பதால், இங்கு எடுத்துக்கொண்டது இவ்விரு வகுப்பில் இதுவோ! அதுவோ வென்னும் சந்தேக மெழாவண்ணம் நச்சினார்க்கினியர் "காட்டகத்து வாழும் மறவர்" எனக் கூறி, வேறுபிரித்துக் காட்டினர். அவ்விதம் கூறாது மறவர் எனப் பொதுப்படக் கூறின் சண்டை சந்தர்ப்பத்தை நோக்கி, "படைஞர்" எனவே பொருள் கொள்ளவேண்டி வருமாதலின், அவ்வித மாசங்கை நிகழாவண்ணமே "காட்டகத்துவாழும் மறவர்" எனவே வேறுபிரித்துக் கூறிய தென்க. இவ்வகையை விளக்கவந்த "காட்டகத்துவாழும்" என்னுந் தொடரை நீக்கிப் படிப்பின் "குறுநிலவேந்தரும், மறவரும் வேந்தரைப் பொருதனர்" எனவே கூறவேண்டிவரும். அப்படிக் கூறுவதால் குறுநில வேந்தரும் மறவரும் வெவ்வேறு குலத்தவராவரா? அது "அண்ணனும் தம்பியும் வந்தார்கள்" என்பதைப் போன்றும், "அரசனும் படைஞரும் சண்டைக்குச் சென்றார்கள்" என்பதைப் போன்றும் உள்ள பிரயோகமாகும். அண்ணனுக்கும், தம்பிக்கும் சம்பந்தமில்லையா? அரசனிலிருந்து படைஞரை வேறுபிரித்துக் கூற முடியுமா? அதைப்போல் குறுநில மன்னருக்கும் அவரது படைஞராகிய மறவருக்கும் சம்பந்தமுண்டெனவறிவர்.

அருணசல புராணத்தில் "வேழமும் பரியும் தேரும் வீரரும் சுவடு நாடிச், சூழ மந்திரிகளோடும் சூழ்ந்தனர்" என்னுந் தொடரில் உம்மை இடைச்சொல் ஒவ்வொன்றிற்கும் வருதலால், ஒரு படையைக் குறிக்காமல், வெவ்வேறு படைகளைக் காருமோ? ஆனைவீரர், குதிரைவீரர், தேர்வீரர், காலாட்படை என அந்தஸ்தைப் பேதப்படுத்திக் காட்டுமேயன்றி, ஒரு படையையே குறிக்கும். அதைப்போல் குறுநில மன்னரையும், மறவரையும், அரசன் படைஞன் என்னும் அந்தஸ்தைப் பேதப்படுத்தி ஒருவகையினரையே விளக்குமெனவறிவர்.

பாரி என்பவனும் குறுநில மன்னனே! அவன் பேரில் சேர சோழ பாண்டியர்களாகிய மூவேந்தரும் சண்டைக்கேகி, அவன் மலையை முத்தனையிட்டனர். அக்காலம் பாரிக்கு படைஞராயிருந்தவர்கள் யாரா யிருக்கலாம். வேடர் எனத்தான் சொல்லவேண்டும். அவர்களன்றி அம்மலையில் வேறு எக்குடி வாழும்? பிராமணர் வைசியர் சூத்திரர் முதலிய சாதியார்கள் வசித்தனர்களோ? இல்லையே! அவர் வசிக்கும் சேர்வராயமலையை அண்ணுந்து பார்க்கட்டும். தற்காலம் பயிரிடும் எஸ்டேட்டுகளை நீக்கி மற்ற மலைகளைப் பார்ப்பாராக. அம்மலைகளில் என்னென்ன சாதியார் வசிக்கிறார்க ளென்பது அவருக்கு நன்றாய்த் தெரியும். எல்லாம் வேடர்தானே! இவர்கள் தங்களில் ஒருவனை தலைவனாக்கிக் கொண்டு, அவனது அதிகாரத்திற்குட்பட்டு வாழ்வர். அவனைக் காட்டுத் தலைவன் எனப்படும்.

"பல்லிதழ் மென்மலர்" என்னும் அகப்பாட்டினுள் "அறனில் வேந்தனாளும்-வறனுறு குன்றம் பல விலங்கினவே" எனக் காட்டுத் தலைவனை காட்டுத்தலைவன் பெயராற் கூறினர்" என்றார் நச்சினார்க்கினியர். இப்பகுதியை அவர் தெரிவித்த, 60-வது சூத்திரக் கீழுரையில் பார்க்கலாம். இதில் வரும் காட்டுத்தலைவன்தான் அரசனவன். காட்டுத்தலைவன் குறுநிலமன்னனவன் என விளங்குவதால் இவ்

விருதலைவர்களையும் ஏக குலத்தவர்களென்பது, எம்மதிப்பு?

தாவா என்றதனானே அரசர் புகழைக் காட்டுவாழ் வோர்க்குங் கூறலும் அவரை அரசர் பெயராற் கூறுவனவுங் கொள்க என்றார் நச்சினார்க்கினியர். இதையும் ஷை சூத்திரத்தின் கீழுரையிலேயே காணலாம். இதில் கூறிய வகையால் அரசர் பெயராகிய "மன்னன்" என்னும் பெயரையும் குறும்பர் பெற்று, குறுநில மன்னர் என வெளிப்பட்டனரென வறிவர்.

"ஆர் அமர் ஓட்டலும்=குறுநில மன்னருங் காட்டகத்து வாழும் மறவரும் போர்த்தொழில் வேந்தரைப் பொருது புறங்காட்டலும்" என்னும் உரையின் கீழ் நச்சினார்க்கினியர் "குறுநில மன்னர் வேந்தரைப் புறங்கண்டதற்கு"

"பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்,
மின்னேர் பச்சை மிஞிற்றுக் குரற்சிறியாழ்,
நன்மை நிறைந்த நயவரு பாண
சீறூர்மன்னன் சிறியிலை யெஃகம்
வேந்தூர் யானை போந்து முகத்த தவே
வேந்துடன் றெறிந்த வேலே பென்னை
சார்ந்தா ரகல முளங்கிழந் தன்றே
யுளங்கிழி சுடர்ப்படை யேந்திநம் பெருவிற்
லோச்சினன் றுரந்த காலை மற்றவன்
புன்றலை மடப்பிடி நாணக்
குஞ்சர மெல்லாம் புறக்கொடுத் தனவே"

என்னும் இவ் வகவலை மேற்கோளாகக் கூறி, அதன்கீழ் "இது சீறூர் மன்னன் வேந்தரைப் புறங்கண்டது" என விளக்கியுள்ளார். குறுநில மன்னனையே சீறூர் மன்னன் என கூறுகின்றார்.

"குறிஞ்சி சிற்றூரே சிறூர் குறிஞ்சி
நன் னிலத்தூர்ப்பெயரே" என்னுந்நிகண்டால் சீறூர் என்பது மலைநாட்டைக் குறிக்கும். அம் மலைநாட்டுத் தலைவனையே சீறூர் மன்னன் எனவும், குறுநில மன்னன் எனவும் கூறப்படும். இவைகளை யறியாது சீறூர் மன்னனாகிய குறுநில மன்னனை அரசரோடு சேர்க்கப் பார்த்தல் மூடத்தனமேயாம். இவர் நச்சினார்க்கினியர் உரையை ஊன்றிப் பார்க்காமல் ஆட்டைப் போல் மேலாகவே மேய்ந்துக்கொண் டோடுகின்றார்.

விஸ்வாமித்திரர் சந்திரகுல காதிமகாராஜன் பரம்பரையி லுதித்தவர். வசிஷ்டரால் பிரம ருஷி என்னும் பெயரைப் பெற்றனர். அவர் அந்நிலையை யெய்தியதால் பிரமருஷி எனப்பட்டனர். அவர் வம்ஸத்தவர்களையும் பிரம ருஷி எனக் கூப்பிட முடியுமா? அவரை பிரம ருஷி எனவும், அவர் வம்ஸத்தவர்களை அரசரென வுங் கூப்பிடுதல் நியாயமல்லவா? அதைப்போல் குறும்பரில் சிலர் சேரசோழ பாண்டியவரசர்களால் தலைமை யெய்தி, குறுநில மன்னர் என்னும் பெயரைப் பெற்றனர். அவர்கள் வம்ஸத்தவர்களும் குறுநில மன்னர் என்னும் பெயரைப் பெறுவர்களா? அவர்கள் வேடர்கள் தானே! அதை விளக்கவே குறுநில மன்னரும் மறவரும் வேந்தரைப் பொருது புறங்கண்டனர் என்றார் நச்சினார்க்கினியர். இதனால் குறுநில மன்னரும் மறவரும் ஏகுலத்தவரென வறிவர்.

சத்திய விஜயநகரமென்பது வேலூருக்கு இருபதுமைல் தூரத்திலுள்ளது. அவ்வூருக்கு அரசராயிருப்பவர், பிராமணர். அவரை ராஜ வென்கிறார்கள். அவ்வூருக் கதிகாரியாயிருப்பதால் அவர் ராஜா வென்னும் பெயரைப் பெற்றனர். அவர் வம்ஸத்தவர்களெல்லாம் ஐயர், பிராமணர் என்னும் பெயர்களால் வெளிப்படுகின்றனர். இவர்கள் சண்டைக்குச்செல்ல நேரிடின், இராஜாக்களெல்லாம் சண்டைக்குச் சென்றார்கள் எனக் கூறமுடியுமா? அவர் பிராமணரோடு கொள்வினை கொடுப்பினை செய்வாரேயன்றி, இராஜாக்களோடு சம்பந்தம் செய்வாரா? அந்த இரவல் இராஜபட்டமுடையவரை பிராமணரெனக் கூறினும் கூறலாமேயன்றி, அவர் வம்ஸத்தவர்களாகிய பிராமணர்களையெல்லாம் ராஜாக்களெனக் கூறமுடியாது. அதைப்போல் நச்சினார்க்கினியர் வாக்கிலேற்பட்ட குறுநில மன்னர் இயற்கை இராஜாக்களல்ல. காட்டதிகாரத்தைப் பெற்றலால் குறுநில மன்னர் எனப்பட்டனர். குறுநில மன்

னரை மறவர்எனக் கூறலாமேயன்றி, மறவரை எல்லாம் குறுநிலமன்னர் எனக் கூறமுடியாது. பர்மா சண்டையில் காட்டரசன் வெளிப்பட்டதைக் கவனியும். அவன் வம்சத்தவர்களெல்லாம் காட்டரசராவார்களா? இப்பாருபாட்டையனுசரித்தே நச்சினார்க்கினியர் குறுநில மன்னரும், மறவரும் சண்டைக்கேகியதாகக் கூறியது. ஆகவே குறுநிலமன்னர் மறவர் வம்சத்தவரே! இப் பகுதியைக்கொண்டே நமது பர்ளிப்புலவர் இராஜாவாகி மேடையேறப் பார்க்கிறார். அது முடியாதகாரியம்.

இராமனாதபுரத்தையாளும் சேதுபதி மகாராஜா எல்லோருக்குந் தெரிந்தவர். அவரையாம் ராஜாவென்கின்றோம். எல்லோரும் அவரை ராஜாவென்கிறார்கள். அந்த வர்மாவும் ராஜாவென ஒப்புகின்றார். அப்படிக் கூறிய நாம் அவர் வம்சத்தவர்களை ராஜர்க்கள் என்கின்றோமா? இல்லையே! மறவர் என்கின்றோம். அதாவது இராமனாதபுரத்து ராஜாவும், மறவர்களும் வந்தார்கள் என்கின்றோம். இம்முறையைக்கொண்டே நச்சினார்க்கினியர் "குறுநில மன்னரும், காட்டகத்துவாழும் மறவரும் சண்டைக்குச் சென்றார்கள்" எனக்கூறினர். இதையறியாது சேலம். அர்த்தநாரிசப் பிள்ளை, மறவரை நடுவழியில் விட்டுவிட்டு, அம் மறவர் வம்சத்தவராகிய குறுநிலமன்னரைத் தூக்கிக் கொண்டோடி, தங்கள் வம்சத்தில் சேர்த்துக் கொள்ளப் பார்க்கிறார். இது என்னமதியீனம்? சேலம், வர்மா குறிஞ்சிநில வாசி. அதாவது அவர் குறவர். மறவருக்குக் கீழ்க்குடியாவர். இவர் அவரைத் தாவவும் முடியாது.

இன்னொன்று சொல்லி இவ் விஷயத்தை முடித்துவிடுவோம். பரசுராமன் மலையாளத்தை அறுபத்துநான்கு கிராமமாக பாகித்து, அறுபத்துநான்கு நம்பூத்திரி பிராமணர்களுக்கு தத்தஞ்செய்தான். அக் கிராமதானத்தைப் பெற்ற நம்பூத்திரிகள் கிராமணி என்கின்றனர். அதைப்போல் கிராமதானத்தைப் பெறாத அவர் வம்சத்தவர்களை நம்பூத்திரிகள் கிராமணி எனக் கூறுகின்றார்களா? இல்லையே! அதைப்போல் காட்டுத்தலைவர்கள் குறுநில மன்னர் எனப்பட்டனர். அத்தலைமை பெய்யாத அவர் வம்சத்தவர்கள் மறவர் எனப்பட்டனர். இதுவே தீர்ந்த முடிபாகும்.

ஆனால் கிராமணி என்பதை, நம்பூத்திரிபிராமணர்களைப்போலல்லாது, நாங்கள் கிராமத்தைப் பெறினும், பெறாதிருப்பினும் பரம்பரையாகப் பெற்று வருகின்றனம். அம்முறை:—

"தூய புரோகிதனும் போந்து துவாரபதியில்
மாயன் மலரடியில் வந்திறைஞ்சித் தாயம்
கொடேனென்றான் வேந்தனக்கோவேந்தரெல்
அடாதென்றா ராழியா யாங்கு' [லாம்

இப் பாரதவெண்பாவில் "தாயம் கொடேனென்றான் வேந்தன்" என்பதற்கு துரியோதனன் உரிமைப்பங்கைக் கொடேனென்றான். "கோவேந்தரெல்லாம் அடாதென்றார்" என்பதற்கு அச் சபையிலுள்ள அரசர்களெல்லாம் தவறென்கின்றார்கள் என்பதாம். இவற்றால் அஸ்தினாபுரத்தை அரசாண்ட துரியோதனனும் வேந்தன் என்றழைக்கப்பட்டான். அச் சபையிலுள்ள அவன் வம்சத்தவர்களும் வேந்தன் என்னும் பெயரால் அழைக்கப்பட்டனர். அரசாளினும் ஆளாதிருப்பினும் அரசனென்னும் பெயரைப் பெற்றிருப்பதைப்போல், நாங்களும் கிராமணி என்னும் பெயரைப் பெற்றிருக்கின்றனமென வறிவர். (பத்திராதிபர்.)

நாடார் என்னுஞ் சொல் ஆராய்ச்சி.

அரங்கேற்ற நிதி.

வசூல்.

பம்பாய், I. D. வேதக்கண் நாடார் F. B. T; F. C. I. ரூபா 5—0—0

ரெட்டியாபட்டி, வ. சு. வே, சுப்பையா நாடார், அவர்கள் ரூ. 1—0—0

இலக்கியப் பகுதி.

பண்டைத் தமிழரும் அவரது சமூக வாழ்க்கையும்.

ஆர். வாசுதேவ சர்மா. எம். ஏ; பி. எல், எழுதியது.

(தொடர்ச்சி.)

வானவர் என்பார் தமிழருள் மற்றொரு வகையினர். அவர்கள் தமிழ்நாட்டில் கொல்லிக் குன்றத்தைச் சார்பிலும் நீலகிரி மலையிலும் மேலைமலைத் தொடர்ப் பிரதேசங்களிலும் தம் இருக்கையை யமைத்துக் கொண்டனர், சேரவரசர் தம்மை வானவரெனக் கூறுவர். பதிற்றுப் பத்தின்கண் பாடப்பட்ட வரசர்களாகிய முதிரக்கிழவன் நன்னனும், அழும்பில்வேளும் தம்மை வானவர் எனக் கூறிக்கொள்வர், "வானவிறல்வே ளழும்பில்" மதுரைக்காஞ்சி,[344-5]

இவருள் கடையானவர் கோசகர் என்பார் (அகம் 250) இவர் வம்பமோரியரைத் தம் துணைக்கொண்டு மோகூரை எதிர்த்ததாகத் தெரிகிறது. "நன்மொழிக்கோசர்" என்ற இவர்கள் வாய்மையிற் சிறப்புடையவர். சிலப்பதிகார காலத்திலே இவர் கொங்கை நாட்டைக் கைப்பற்றினர். பாண்டிய நாட்டில், பழையன் மாறனுக்கு அடுத்த பெருமையுள்ளவராகப் பிரசைகளுக்குள் இவர் கருதப்பட்டனர். இவர் தென் பாண்டியையும், சோழ நாட்டையும் முற்றுகையிட்டனர். ஆனால் திதியன் கிள்ளி என்பவரால் முறியடிக்கப் பட்டனர். இவர் படையெடுத்து வந்ததையை ஔவை

"பறைபடப் பணில மார்ப்ப விறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நல்லூர்க் கோசர்" (குறுந்.15) எனப் பாடுகின்றனர்.

பாண்டிய சோசோழ மூவரசர்க்கும் ஆரியர்க்கும் அடிக்கடி போர் நிகழ்ந்ததாகப் பண்டைச் சரிதம் கிடைக்கிறது. ஆரியப் படைக் கடந்த நெடுஞ்செழியன் என்ற செழியனெனும் பெயர் அவன் ஆரியரை வென்றமையைப் புலப்படுத்தா நிற்கும். சோழவரசன் ஒருவன் ஆரியரை வல்லத்தில் முதுகு கண்டான் (அகம் 335) மகத வரசர் நூற்றுவர் கன்னர் துணைக்கொண்டு சேரன் செங்குட்டுவன் ஆரியவரசர் கனகவிசயரை வாட்டினன், ஆரியருக்கும் தமிழருக்கும் இங்ஙனம் பகை முற்றி, ஆரியர் வெற்றியாளராய் அரசுரிமை கொண்டு தமிழ்நாட்டின்கண் குடியேறுவிடினும், அநேக பார்ப்பனக் குடியினர் தமிழ்நாட்டில் வளர்ந்ததாக மாத்திரம் , அறியப்படுகின்றது. குறுமுனி அகத்தியர் குடிகொண்டதாகக் கருதப்படும் பொதிய மலைக்கடுத்துச் சில வூர்கள் அந்தணர் வாழ்வதாக இருந்தன. அவர் தமிழ்மக்களோடு அதிகமாகப் பழகாவிடினும், கிராமங்களிற் றனிமையிலும் நகரங்களில் தனித் தெருக்களுள் தம்மவரோடு கூடியும் வசித்தனர். அவர் பாண்டிநாட்டு மதுரை, தங்கால், வயனங்கோடு என்ற வூர்களிலும், சேரநாட்டு வஞ்சி.

"பாக்கரு நால்வகை மறையோர் பறையூர்" (சிலப். 28, 76.) எரகம், குடமலைப் பக்கல் மரங்காடு என்னும் ஊர்களிலும் சோழநாட்டு காவிரிப்பட்டினத்தும்

"மறைநாஞ் சான்ற மருதன் தண்பணை
யந்தணா ளருரா வருங்கடி வியனக
ரந்தண் கிடங்கி-னார்மூ",

ஆவினன்குடி என்ற ஊர்களிலும் மிகுதியும் வசித்தனர். காப்பியத் தொல்குடிப் பார்ப்பனர் சோ நாட்டின்கண் வசித்ததாகச் சிறப்புடனெடுத்தோதப் படுகின்றனர். இவர் தம் வீடுகளில் 'மனைபுறை கோழியொடு ஞமலிதுன்னு வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்' (பெரும்பாண், 299. 300.)

இவர் முக்கிய தொழில் முத்தீயோம்பலும், வேள்வி யாற்றலும், அருமறை யோதலும், இவர்கள் விண்ணுள்பவரெனவும், ஆசிரியர்களாகவும் பிறரால் போற்றப்பட்டிருந்தனர். அடிக்கடி அவர்கள் பொதியம் வலம் வந்தும், குமரியாடியும், காவிரி மூழ்கியும், கங்கைக்

கரை சென்றும் புண்ணிய காரியங்களை மேவிட்டு வெளிச்செல்வது முண்டு. இக்காலை அவர் காலிற் செருப்பணிந்தும், தலைக்குக் குடைபிடித்தும் செல்வதுண்டு. இத்தகை யாத்திரிகரை பின்வருமாறு கவியமைக்கிறார்.

"எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடை நீழல்
உறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலு
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை யந்த
ணீர்" (கலித், 9.)

இவருள் சிலர் சோதிடங்கூறலு முண்டு அவருக்குப் பார்ப்பாரென்று பெயர்.

கோபாலகராகிய ஆயர் முற்கூறியவர்களினின்றும் வேறுபட்டவர்கள். ஆவென்பது தமிழில் பசுவைக்குறிப்பது. தமிழ் நாட்டிற்கு இவர்கள் பாண்டிய முதல்வரோடு வந்து குடியேறினோர்கள் என்ற செய்தியை (கலித்தொகை. 109.)

"வாடாச்சீர்த் தென்னவன் றொல்லிசை
நட்ட குடியொடு தோன்றிய நல்லினத் தாயர்"

என்ற அடிகள் விளக்குவன. அவர் தலைவர்களைத் தமிழ் நாட்டினர் நாகருக்கும் தமிழருக்கும் பொதுவாக ஒத்திருந்தமையானோ, வேறெக் காரணத்தானோ பொதுவர் என வழங்குவர். இவர் குலத்தரசர்களைக் களைபோடு கரிகாற் சோழன் அறித்தானெனப் பட்டினப்பாலையடி.

"புன்பொதுவர் வழிபொன்ற" என்பது குறிக்கும். அவர் வழிபடு கடவுள் மாத்திரம் அவர் குலத்தவதரித்த கண்ணப்பிரானேயாம். கோபியரோடு கண்ணன் புரிந்த லீலைகளையும், பாரதக்கதைகளில் வியந்து போற்றப்படும் அற்புத வீரச்செயல்களையும் அவர் அறிந்திருந்தனர். மதுரையில் வசித்திருந்த ஆயர் குலச்சிறார் கிருஷ்ணன், பலராமன் முதலியோரை உள்ளிட்டுவரப் பாட்டுகள் பாடுவதும், யசோதை, நப்பின்னை முதலியோரை உருவகப்படுத்திக் கூத்தாடும் செய்தியையும், சிலப்பதிகாரத்து ஆய்ச்சியர் குரவையிற் பரக்க காணலாம். அவர்களுள் இக்காலத்திய சல்லிக்கட்டுப் போன்றதொரு வழக்கமும் வழங்கி வந்திருந்தது. அதற்கு ஏறுதழுவல் என்று பெயர். அதனை முல்லைக்கலிப் பாட்டொன்று பின்வருமாறு மிக வழகாக வருணிக்கின்றது. (கலித்தொ 101)

தளிபெறு தண்புலத் துத்தலைப்பெயல் கரும்பீன்று
முளிமுதற் பொதுளிய முட்புறப் பிடவமுங்
களிபடா னிலையேபோற் றடவுபுதம்பீன்று
ஒளிபுட விளைந்த ஒளிமிழ்தழ்க் கோடலு
மணிபுரை புருவின காயாவும் பிறவு
மணிகொள மலைந்த கண்ணியர் தொகுபுடன்
மாறெதிர் கொண்டதம் மைந்துட னிறுமார்
சீறரு முன்பினோன் கணிச்சிபோற் கோடுசீஇ
யேறுதொழூஉப் புகுத்தன ரியைபுடனொருங்கு
அவ்வழி,
முழக்கென விடியென முன்சமத் தார்ப்ப
வழக்குமாறு கொண்டு வருபுவரு பீண்டி
நறையொடு துகளெழ நல்லவ ரணிநிற்பத்
துறையு மலாமுந் தொல்வலி மராஅமுட்
முறையுளி பராஅய்ப் பாய்ந்தனர் தொழூஉ
மேற்பாட் டுலண்டி விறனெக்கும் புன்குருக்க
ணோக்கஞ்சான் பாய்ந்தபொதுவனைச் சாக்குதிக்
கோட்டைக் கொண்டு குலைப்பதன் றோற்றன்
.................................காண்!
சுடர்விரிந் தன்ன சுரிநெற்றிக் காரி
விடரியங் கண்ணிப் பொதுவனைச் சாடிக் [ன்
குடர்சொரியக் குத்திக் குலைப்பதன் றோற்றங்கா
செவிமறை நேர்மின்னு நுண்பொறி வெள்ளைக்
கதனஞ்சான் பாய்ந்த பொதுவனைச் சாடி [ன்
நுதிநுனைக்கோட்டாற் குலைப்பதன் றோற்றங்கா

அகன்றதொரிடத்தே வேலிகள் கட்டித்தொழுவை யமைப்பார். அதனுள்ளே கூர்த்தகோக்குடைய காளைகளைக் கொம்புகளைக் கூரிதாகச் சீவி அலங்கரித்து உள்ளே விடுவார். ஓர் புறத்தில் மணப்பதற்கு உரிய ஆயர்மகளிர் இவ்விழவினைக்காணத் திரண்டு நிற்பார். ஆயர் குமரரும் ஆலடியமர்ந்த தெய்வங்களை வழிபட்டுக் காயாவும், காந்தளும், பிறமலரும் மிடைந்த மாலைகளை யணிந்து ஏறுதழுவ நுழைவர், பறை கொட்டு மரவங் கேட்டுக் கலங்கிய காளைகள் மிரண்டு வருவாரைக் குத்திப்பாயத் தவித்து நிற்கும். இவ்விடையில் ஆயர் சிறுவர் தொழுவிற் புகுந்து தாம் பிடித்தடக்கக் கருதிய காளையின் மேற்பாய்வர். சிலர் காளைகளை வே

நோக்கிக் கொம்பினைப் பிடிக்க யத்தனிப்பர். சிலர் மேல்விழ்ந்து வாலைப்பிடிப்பார். இக்காலை யந்தோ! சில சிறுவரை அவைக் கீழே விழுத்திக் கொன்றுவிடும். இங்ஙனமாக இவ்வேறு தழுவலில் தாம் எடுத்த காளையைப் பிடித்து வெற்றியுடன் திரும்புமவன் தனக்குற்ற தலைவியை அங்குக் கூடியிருந்த மகளிருள்ளிருந்தும் தேர்ந்து மணங்கொள்வான்.

குறிப்பு:—இவ்வியாசத்தில் ஆயராகிய பொதுவரும் தலைமை யெய்தியதாகவும், கரிகாலச் சோழன் அழித்ததாகவுங் கூறியுள்ளது. அது வேடர் தலைமை யெய்தி குறுநிலமன்னர் எனப்பட்டதைப்போ லென்க. அவ்வேடர்களும் தொண்டமானால் அழிக்கப்பட்டனர். (ப-ர்)

விக்கிரகாராதனம்.

(பிர்மஸ்ரீத்தியா.)

இங்கு அவ்வித பாவனை விபரீதமெனச் சொல்லல் மாத்திரம் கூடாதென்பதல்ல; மற்று அது உண்மையையும் விளக்குமென்பதே கருத்து. உலகத்தில் ஒரு கணிதவித்துவான் கணித வித்தையைத் தனது மாணாக்கர்க்குக் கற்பிக்குங்கால் 'க' என்னும் எழுத்தைக்கொண்டு நூறு மனிதர்களைக் குறிப்பிட்டால் அது பாவனையே யென்றெண்ணி அதனுண்மையும் கணக்கையுமொருவன் பொய்யெனச் சொல்லுவானோ! இனிப் படத்திலெழுதிய பூமண்டலத்தைக் கண்டு ஒருவன் அதுகொண்டு பூமியின் அமைப்பைப்பற்றி ஒருவன் நிச்சயித்தால் அதுவும் பொய்யென இவர் சாற்றுவரோ யாதோ அறியேம். இனிக் கோளகணிதத்தில் கையிலடங்கிய ஓர் சிறு துண்டுக்கடிதத்தில் சுக்கிரன், சந்திரன், சூரியன் இவர்களை ஒரு ரேகையாய் எழுதிக்காட்டி அதைக்கொண்டு கணக்கிடுவனேல் அதனால் அவன் கண்ட உண்மையுந் தவறுமோ? அவன் எழுதியபடி கிரகணம் முதலியவை உண்டாகாமல் போமோ! இனி நமது நண்பர் "அநேககோடி யோசனைகளளவுள்ள சூரியன் முதலிய பெரிய அண்டங்களை ஓர் சிறு துண்டில் எழுதிக் குறுகியதாயும் சிற்றளவுள்ளதாயும் பாவித்தல் கொடிய செய்கை. அவர் கண்ட தன்மையுமல்ல" என வாதிப்பினும் வாதிப்பர். இனி "அண்டங்கள் அனைத்தையும் தமது கண்களாற் காணுவது எவருக்குங் கூடாமையால் அங்கு அவ்விதம் நூலறிவைக்கொண்டே பாவிக்க நேர்ந்தது" எனின், கடவுளையும் ஒருவர் காணார் ஆகலால் அதையும் பாவித்தலே அங்கு தக்கவழி என்று சாற்றுவதும் என் மணம்பெறுது? ஆதலால் நாமும் வேதம் முதலிய சாத்திரங்களில் சொல்லப்பட்ட திவ்விய ரூபங்களை உருவப்படுத்தி அதைத் தியானித்தலே எமக்கு நியாயமென்க. அதன் பயனே மனம் உறுதிபெறுதல், கடவுளிடம் பேரன்புண்டாதல், நமக்கு அதுவழி நிற்றலால் பரமானந்தம் பெருகுதல் என்பனாதியாம். ஆகையால் கோளகணித விதிபோல் இக்கடவுள் விஷயத்திலும் நல்ல பாவனையே நற்கதியளிக்குமென்க. இனிப் பாவனை என்பது அதிகமாய் நற்பயனையளிக்கும் என்றும் அது உண்மையைக்காட்டும் கருவியென்றும் சாதிப்பாம். பாருங்கள்! இங்கு எழுதிவரும் எழுத்தாகும் கோடுகள் உண்மையில் எழுத்துக்களல்லவே. ஆயினும் அவைகள் உண்மை எழுத்துக்களை நினைக்கவும் அதனால் பொருள் விளக்கவும் கருவியாக நிற்கவில்லையா? இனி அந்தக்கோடுகளை எழுத்துக்களாகப் பாவித்தல் கெடுதியாமோ? நமது நண்பர் சொல்லியபடி அங்கு வடிவெழுத்துக்கும் ஒலியெழுத்துக்கும் வேற்றுமை வருமாறு இருத்தலால் அவைகளை ஒலியெழுத்தாக நினைத்தல் குற்றமாமன்றோ? பாருங்கள்! ஒலியெழுத்துக்கள் காதாற் கேட்கத்தக்கன; வடிவெழுத்துக்களோ! கண்ணாலன்றி அறியக்கூடா. அவ்வொலிகள் ஒவ்வொரு க்ஷணங்களில் ஒழியும். வடிவெழுத்துக்களோ நீடித்தகாலம் இருக்கத்தக்கன. அவ்வொலி எழுத்துக்கள் மனிதர் முதலியோர் முகங்களிலுள்ளன. மற்றவை ஏடுகளிலும் மற்றைய சாதாரணப் பத்தி

ரங்களிலுமே. ஆகலின் இவ்விருவேறு தொழில்களையும் ஒன்றாகப் பாவிப்பது உசிதமில்லையென எவர் சாதிப்பர்? அவ்விதம் பிம்பங்களில் யாம் தியானிப்பது உசிதமென்பதாய் அமையும். ஆதலாற்றான் ருக்கு, யெஜுஸ்ஸா, சாமம் இம்மூன்று வேதங்களிலும் இம்மந்திரம் சொல்லப்படுகிறது. ஆயோராஜன் ருக்தவால்யருக்திரம் ஹோதாரம் ஸத்யயஜமரோ தஸ்யோ:. அக்கினிம் புராதன யித்னோசித்தாத ஹிரண்யரூப நவ ஸேகிருணுத்வம்" இதன்பொருள். "ஆரோதஸயோ" வானத்திலும் பூமியிலும் புகழ்பெற்றவர் "அத்வரஸ்ய" யாகம் முதலிய பல கருமங்களுக்கு "யஜ்ஞாநாம்" கர்த்தாவுமுள்ளவன் 'ஸத்யயஜ' உண்மையால் பூஜிக்கப்படுகிறவன் "ஹோதாரம்" எல்லோராலும் பூஜிக்கப்படுபவன். (இனி ஹோமம் முதலியவற்றால் ஆராதிக்கப்பட்டவன் என்று வேறு எடுத்துக் கூறுவதால் முன் உண்மையால் பூஜிக்கப்படுபவன் என்றது பிம்பாராதனத்தையே குறித்தது.) "அக்னிம்" "அக்னியின்கண் அந்தணர்களுள்ளவன்" ஸ்தநத்திரான் அக்னியின்கணுள்ளான் "உருத்திரனே அக்னி" "யான் அக்னியின் உள்ளிருப்பேன்" என்பதாதி வசனங்களால் அக்கினியெனச் சொல்லத்தக்கவன் அல்லது எல்லோருக்கும் நற்கதியளிப்பவன், "ருத்ரம்" பரமேசுவரன் இவனை "அகர்த்தாத்" மனதிவெட்டாததாயுள்ள "தனயித்னோ" மேகம் போன்ற மாணாக்கிற்கு "புரா" முன்னரே "அவஸே" மாக்ஷத்திற்காக "ஹிரண்யரூபம்" ஸௌரியமண்டல முதலியவற்றில் ஆராதிக்கத் தக்கவனும் பொன் முதலியவற்றால் ஏற்பட்ட உருவமுடையவனாக "கிருணுத்வம்" பூசை செய்க" என்பதே. இம்மந்திரம் உருத்திர பூஜையிற்றானே ஸாமவிதான பிராமணத்தில் விநியோகிக்கப் படுகின்றது. "அயோராஜா முதலிய சாமங்கள்——உருத்திரசங்கிதை அதைச் சபித்தலால் ருத்திரனைப் பிரீதிசெய்விப்பான்' என்று இங்கு நன்றாய்ப் பிம்பபூசை ஒன்றே விதிக்கப்படுகின்றது. ஆதல்கொண்டே முன மந்திரத்தில் "விதிருதப்பாவிருக்குமது" என்று இருக்கின்றது. "பூஷா" விபுலோஷன்' என்பதாதி வாக்கியங்களால் உலகத்தை ரட்சிப்பவன் 'ருக்ஞ'னென்னுல் "விதிருத"பிம்பமாய் அமைக்கப்பட்டவனாக 'பாவி' உலகத்தைக் காக்கின்றாய்" எனபதாதி பிரமாணங்களால் இப் பிம்பாராதனம் வைதிகமென்றும் தற்பாவனையே அவ்விதப்பாவனை என்றும், அதுவே எம்மவர்க்கு ஆவசியகமான வைதிக காரியமென்றும் துணிபப்பட்டது. பிறகு இலிங்கம் முதலிய ஏற்பாடுகளின் பயனைப்பற்றி நிரூபிப்பாம். இனி மற்றைய கேள்விகளைப்பற்றிக் கவனிப்பாம். அக்கேள்வி இது:—'எந்த வித்துவான்கள் பிராமணங்களையும் உபநிடதங்களையும் பிரமாணமாகவும் வேதமாகவும் ஒப்பி இவ் விஷயங்களுக்கு விடை பகருகின்றனரோ அவரிடம் யாம் முன்னமே குறிப்பது யாதெனில், நான்கு வேதங்களின் சங்கிதைகளிலுள்ள மந்திரங்களில் இவைகளைப்பற்றி யாதுமில்லை என்பதே" என்பது. இந்த இவர் எழுதும் வாக்கியத்தில் "பிராமணங்களையும் உபநிடதங்களையும் வேதங்கள் என ஒப்பி" என்பதால் தாம் ஒப்பாத விஷயம் இது என்று தமது அபிப்பிராயத்தை வெளியிடுகிறார். இனி இவரை நாம் கேட்கவேண்டியது ஒன்று உண்டு. அதாவது "இவர் உபநிடதங்களை வேதங்களல்லவெனச் சாதிப்பின் அவை எவ்விதத்திலும் பிரமாண மாவதில்லை என்றோ? அல்லது புராணங்களைப்போன்ற பிரமாணம் என்பதோ? இவ் விஷயங்களைப்பற்றிச் சிறிதும் இவர் வரைந்தாரில்லை. எவ்விதமாயினும் இருவகையிலும் யாம் குற்றங்களை எடுத்துரைப்போமேல இருவகையும் ஒழிந்தபோது அவ்வுபநிடதங்கள் முற்றிலும் அப்பிராமாணங்களென உரைத்தல் மணம்பெறுது. அவ்வுபநிடதங்களில் எழுதப்பட்ட ஒவ்வொரு சங்கதி சோதனைக்குச் சரியாய் இருப்பதால் அதிற்காரணமில்லாமற் குற்றங்கூறல் அமையாமையாலென்க." மற்றொரு வழியாயின் அதே காண்டத்தில் வேதத்தன்மை நன்கு புலப்படுவதால் அதை வேதங்களல்லவெனல் எவ்வாற்றானும் மியையாதென்க. ஆதலாற்றான் "காண்டல முதலியனவைகளால் காணற்கரிய வஸ்துவைக் கைகொல்

யிபோல் காட்டுங்கருவி வேதம்" எனப் பட்டபாதர் கூறினர். ஜட ஜீவ ஈஸ்வர வத்துக்களின் உண்மை அதே புத்தகங்களில் புலப்படுதலாலென்க. இனி மனிதருக்கு ஆத்திகத் தன்மை சித்திக்கவே அப்பாகத்திலமைந்திருக்க அதை அப்பிரமாணமெனச் சாதிக்கல் மிகவும் பொருந்தாது ஆதலாற்றான் நம்முன்னோர் ஸ்ரீவாதராயண முனிவர் முதலியோர் வேதாந்தங்களென்னும் உபநிடதங்களே உயர்ந்த பிரமாணங்கள் என வாதித்தார்கள். நிற்க, தற்காலத்திற் சிலர் நம் மதங்களில் உண்மையறியாது மற்றவர் எழுதிய நூல்களையே படித்தும், நமது நூல்களை அவர்கள் மொழி பெயர்ப்பினாலேயே அறிந்ததாகப் பாவித்தும் அவர்கள் உபந்நியாசங்களையே கேட்டும் தம்முட் தாம் சித்தாந்தம் செய்து கொள்ளுகிறார்கள். அவையாவன:—

"ஆதியில் நம்மவர் அறிவின்மையாற் கண்ட வத்துக்களையெல்லாம் தோன்றியது தோன்றியபடிக் கும்பிட்டு வந்தார்கள். அக்காலத்தில் எழுதப்பட்டன:— சாமானியமாய்ச் சங்கிதா மந்திரங்கள். பிறகு காலஞ்செல்லச் செல்லப் புத்தியிற் சிறந்தவர்கள் பற்பல வத்துக்களை ஆராய்ந்து அறிந்து கண்ட உண்மைகளைச் சேர்த்து உபநிடதங்கள் ஆக்கினார்கள். பிறகு இவ்வுபநிடதங்கள் மேலான பொருள் பெற்றவையால் முக்கியப் பிரமாணமானவைகள் என மற்றவர் ஒப்பநேர்ந்தது. என்பதாதியே இவ்விதம் அவர் எழுதும் விஷயம் எக்கருத்தாலெனில், ஓர் சமயம் ஆரியன் ஒருவன் தன் மத புத்தகத்தையும் மற்றவன் மத புத்தகத்தையும் ஒத்துப்பார்ப்பதுடன் இவ்விஷயங்களையும் நினைத்துப்பார்த்தால் "நாம் முன் நெருப்பைக் கும்பிட்டோம்" "அவர் மரத்தைக் கும்பிட்டார்" "வேதங்களில் கர்மகாண்டம் ஞானகாண்டம் இரண்டும் எமக்குமுண்டு" அவர் புத்தகமும் முன்பின்னேற்பாடுகள் அமையப்பெற்றது" எமக்கு உபநிடதமே முக்கியம் "அவர்க்குப் பின்னேற்பாடே முக்கியம்" என்று பரிசீலித்து இரண்டு மதத்தையும் ஒன்று என்று நிச்சயிப்பார்" என்பதே. இவ்விதம் நம்மவர்களை மடக்கவேண்டி அவர் எழுதிவைத்த புஸ்தகங்களின் உண்மையறியாது அந்தோ! வீணில் அதையே படித்துப் பாடுபடுகின்றார்கள். மேலும் இவர்கள் ஒப்பியபடி உபநிடதங்களென்பன பிற்காலத்து உதித்த சில மஹான்களால் வரையப்பட்டனவென்பதும் மற்றும் சங்கிதையென்பன உண்மையறியாத உலகத்தில் கண்டதெல்லாம் தெய்வமெனக் கொண்டாடியவர் எழுதியதென்பதும் உண்மையாயினும் அறிவினர்கள் எழுதிய பின் வார்த்தையாகிய சங்கிதைகளில் இவருக்கு இவ்வளவு சிரத்தை யுண்டானது என் காரணம் பற்றியோ! பாருங்கள்! ஜைமுனி மஹரிஷி பிராமணங்களுட்படச் சங்கிதைகள் பிரமாணங்களெனவும் முனிவர் மணியாய ஸ்ரீவாதராயண முனிவர் சுருதி முடிவாகிய உபநிடதமே முக்கிப் பிரமாணமெனவும் சாற்றுகின்றார்கள். இங்ஙனமிருக்க நமது நண்பர் நாம் சொல்லவேண்டிய யுக்திகளைப்பற்றி மட்டில் நம்மவர்கொண்ட ஆறுசாஸ்திரங்களில் அடக்கியிருக்கவேண்டுமென்று கூறினரேயன்றித் தம் விஷயத்தில் அவ்வாறு சாஸ்திர விதிகளையும் அச்சாஸ்திரகர்த்தர் கருத்துக்களையும் பற்றி நின்றாரில்லை. இனி ஓர்கால் சங்கிதைகள் முதலில் எழுதப்பட்டமையால் அதுவே பிரமாணமாமென்று சொல்லின் இவர் பிரமாணமாவதையும் முற்றோன்றியதையும் பகுத்தறிந்தாரில்லையென வெள்ளிடைமலைபோற் றோன்றும். இனி இவரைக் கேட்கும் வினாவொன்றுண்டு. அதாவது இவர் நமது கன்மமீமாஞ்சா சாஸ்திரத்தைக் கரைகடந்து அதற்குக் கர்த்தாய் எழுந்த ஸ்ரீஜைமுனி மஹரிஷியின் அபிப்பிராயத்தை மறுப்பதற்குக் காரணம் யாதோ! அம்முனிவர் மந்திரங்களைப் பொருட்படுத்தும் விஷயத்தில் பிராமணங்களே முக்கியப் பிரமாணங்களென "வசனத்தால் தன்பொருள் விட்டது லிங்கிரியமாகும்" என்னும் சூத்திரத்தில் வெளியிட்டார். இச்சூத்திரத்திலுள்ள வசனம் என்னும் பதம் 'ஐந்திரியென்னும் இருக்கால் கார்கபத்தியத்தைப் பூஜிக்க" என்று தொடங்கிய விதிகளையே குறிக்கின்றது. ஆதலால் பிராமணங்களுக்கும் உபநிடதங்களுக்கும் மந்திரங்களுக்கும் இவர் காட்டிய வேற்றுமை மனம்பொருந்தா

ழிந்தமை காண்க. இனி இவர் கருத்து யாதெனில் "யாம் ஒருசமயம் உபநிடதங்களைப் பிரமாணமெனக் கொள்வோமாயின் அதில் இப் பிம்பாராதனத்தை எடுத்துக்காட்டும் பல வசனங்களிருத்தலால் நமது வாதம் மனம்பெறு தொழியும்" என்பதே. ஆதலாற்றான் இவர் அவ்வுபநிடதங்களை அப் பிரமாணமெனக் குறிப்பிட்டார். இனி இவர் இவ் வெறுஞ் சொற்களால் அப்பிரமாணமெனச் சாதிப்பின் அது கொண்டு உபநிடதங்களிற் கூறிய உண்மைகள் பொய்யாய்விடுமோ! இவர் ஒப்பியவாறு ஒருவன் கொள்ளினும் உண்மையறியாதவர் எழுதியதாய சங்கிதைகளிற் காணப்பட்ட யாகமுதலிய கன்மங்களிலும் உண்மையறிந்த பெரியோரெழுதிய உபநிடதங்களிற் காணப்பட்ட இப்பிம்பாராதனம் முற்றிலும் உண்மையெனச் சொல்லாதே யமைந்தது. இனி இவர் கருத்தை உன்னுங்கால் கன்மங்களினும் ஞானமே சிறந்ததென இவர் வாதத்தால் இவருக்கும் உபநிடதங்களில் அதிகப் பற்றுள்ளதாகவே புலப்படுகின்றது. ஆயினும் பிம்பாராதனத்துக்குச் சோம்பித் தமக்குக் கன்மகாண்டங்களில் அதிக பற்றிருப்பதுபோல் காட்டி அதற்கென ஓர் வழி விடுகின்றார். இனி அவரை வினவின் "யாம்விக்கிரகங்களிற் கடவுளைவணங்குவதில்லை. நேரே அப்பரம்பொருளைத் தியானிக்கின்றோமென ஓர் ஞானி வேடம்பூண்டொழுகின்றார். இவர் உண்மையில் சங்கிதைகளையே முக்கியப்பிரமாணமெனக் கொண்டவராயின் இவர் யாக முதலிய கிரியைகளையே நடாத்த முயல்வார். அங்ஙனமில்லாமையால் அவர் நமது ஆரிய சித்தாந்திகளை மயக்கவே ஓர் வழி எடுத்தாரெனக் கண்டொழிக. ஆதலாற்றான் நாம் இதற்கு வேண்டிய மந்திரங்களையெல்லாஞ் சங்கிதைகளிற்றானே யிருந்தெடுத்துக் காட்டினோம். மந்திரங்களைச் சொல்லின் அதன்பொருள் வேறென இவர் கூறுவாரென்றெண்ணி அதற்கு வேண்டிய பிரமாணங்களை எடுத்துக்காட்டினோம்.

கேள்விக்கு சமாதானமும், அதற்குமேல் கேள்வியும்.

(முன்றொடர்ச்சி.)

சேலம் ஸ்ரீ S. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் எம்மைக் கடிதமூலமாக, எம் சாதிவிஷயமாக ஏழு கேள்விகள் கேட்டுள்ளார். அதோடு அவர் குறும்பர் விஷயமாகவும், எம் சாதிவிஷயமாகவும், தனித்து எல்லாம் கண்டறிந்தவரைப் போல் ஒரு முடிவுங் கூறிவிட்டார். அவற்றுள் குறும்பர் விஷயமாக அவர் கூறிய முடிவை, சென்றமாதப் பத்திரிகையில் கண்டித்தொழித்தாம். இனி அவர் யாம் கண்டித்ததை சரியென்றாவது, அல்லது தவறென்றாவது நூலோடு கூற வேண்டுவது அவர் கடமையாக முடிந்தது.

இரண்டாவதாக அவர் எம் சாதிவிஷயமாக கூறிய முடிவை அவர் கேட்ட கேள்விகளுக்கு யாம் சமாதானம் கூறிய பிறகு கூறிமுடிப்பாம்.

இனி சேலம் S. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் கேட்டனுப்பிய ஏழு கேள்விகளுக்கும் சேலம் அர்த்தநாரீசப்பிள்ளை கேட்ட இரண்டு கேள்விகளுக்கும் ஒன்றன்பின் ஒன்றாக விடையளித் தொழிப்பாம். கிருஷ்ணசாமி ஐயரது முதற் கேள்வியும், அர்த்தநாரீச நாய்க்கரது நான்காவது கேள்வியும் ஒன்றே! அஃது வருமாறு:—

(ஐயர் கேள்வி) "உங்களுக்கு நாடார், முதலிய பட்டங்கள் எவ்வளவு காலமாய் உண்டு, மிகப் பழைய காலப் பட்டமாய் என்ன ஆதாரம் ஒப்புவிக்கின்றீர்?

(நாய்கர் கேள்வி) "நாடார், கிராமணி என்னும் பட்டங்கள் உங்களுக்கு ஏற்பட்ட காலம் தெரியுமா? உங்கள் முன்னோர்கள் தமிழரசர் அரச காலத்தில் இப் பட்டங்களுடன் இருந்ததாக ஒன்றிரண்டு உதாரணங்கள் ஒப்புவிக்க முடியுமா?" என்னும் இவ்விரு கேள்விகளும் ஒன்றுக்கொன்று ஒப்ப முடிந்ததாகும்.

இவற்றிற்கு எமது சமாதானம்.

நூறு வருடத்திற்கு முற்பட்டு எங்களுக்கு நாடார் பட்டமும், கிராமணி பட்டமும் உண்டு என விளங்குகின்றன. அதற்கு மேலும் இருக்கலாம் எமது கைக் கெட்டவில்லை. மதுரை கிழப்பேட்டைக்கு அடுத்தும், அதற்கு கிழக்கிலுள்ள நிலம் வாங்கின விக்கிரயப் பத்திரம் வருமாறு:—

பத்திரத்து நகல்.

சாலிவாகன சகாப்தம் ௲எ௱௩௰௫-க்கு மேல் செல்லாநின்ற ஸ்ரீமுகளு பங்குனிமீ ௨௰ மதுரையிலிருக்கும் சையது மதீறுசாப்பு அவர்கள் மேல்படி யூரிலிருக்கும் கிழப்பேட்டையைச் சேர்ந்த விருதுபட்டி ஆதிமூர்த்தி நாடான் கருப்ப நாடான் அருப்புக்கோட்டை பிச்சகுட்டி நாடான் கருப்ப நாடான் பாலையம்பட்டி பெருமாள் நாடான் இவர்கள் உள்ளிட்ட நாடாக்களனைவோருக்கும் மனை விலை கிரைய சாதனம் எழுதிக்கொடுத்தபடி விலை கிரைய சாதனமாவது என்னுடைய சொந்தமான மனை நான் குடியிருக்கிற மனைக்கும் மேற்கு முன் தங்களுக்கு விலைக்கிரையம் பண்ணிக்கொடுத்த மனைக்கும் வடக்கு மாசி வீதிக்கும் கிழக்கு கிழமேலோடிய நாராசத்துக்கும் தெற்கு இந்த நான்கு எல்லைக்கு உள்பட்ட என் சொந்தமான மனை கிழமேல் அடி கூ௰௨ தென்வடல் அடி ௬௰௫ இதன் வடக்கு தென்வடல் அடி உ௰௪ கிழமேல் அடி ௰௩. இந்த மனையை தங்களுக்கு நிக்கரணைசெய்து சுத்தக்கிரையம் பண்ணிக் கொடுத்து. பூவிராகன் ௬௰௫ ஊசிகாந்தம் பூவிராகன் இ. ஆக பூவிராகன் ௬௰௫ இயும் தாங்கள் கொடுத்து நான் ரொக்கம் பத்திக்கொண்டபடியினாலே என்றென்றைக்கும் புத்திர பௌத்திர பாரம்பரையாக சந்திராதித்தாள் சந்திர பிரவை உள்ளவரைக்கும், கல்லுங் காவேரியும் புல்லும் பூமியும் உள்ளவரைக்கும் இந்தநான்கு எல்லைக்குட்பட்ட கீழ்நோக்கிய கிணறும் மேல் நோக்கிய மரமும் நிதி நிக்ஷேப முள்பட தானதி விநிமய விக்கிரயங்களுக்கு யோக்கியமாக ஆண்டு அனுபவித்து கொள்வனுகவும் இந்தப்படிக்கி ஆகுமிடத்தில் தடையுடைவந்தால் நானே முன்னிட்டு தடை தீர்த்துக்கொடுப்பேனுகவும் ராசிக தெய்விகமானல் நம்மை தொட்டு பணியில்லாதாகவும் இந்தப்படிக்கி சம்மதித்து என்றுசியில் மனப்பூர்வமாய் எழுதிக்கொடுத்தேன்.

விருதுபட்டி ஆதிமூர்த்தி நாடான் கருப்ப நாடான் அருப்புக்கோட்டை பிச்சகுட்டி நாடான் கருப்ப நாடான் பாலையம்பட்டி பெருமாள் நாடான் இவர்கள் உள்ளிட்ட நாடார்கள் அனைவோர்களுக்கும் சுத்தக்கிரைய சாதனம் எழுதிக்கொடுத்தேன்.

சையதுமதீறு சாய்பு அவர்கள்
இதற்கு சாட்சி

பயிதல்லி சாயிபு
பிராம் சாய்பு
கட்டைக்கொத்தன்

வயித்தியம் பட்டுநூல் நாகப்பன் செட்டியார் இவர்கள்அறியஇந்தகிரையசாதனம்எழுதினது பொடலாசமைய நாயக்கன் தற்குறி சாக்ஷி. அறிவேன். சட்டைக்கொத்தன்

இவ் விக்கிரயப் பத்திரத்தில் சையது மதிறு சாயபு அவர்கள் வடமாசித் தெருவுக்கு கிழக்கிலுள்ள நிலத்தை, 45. பூவிராகனுக்கு நாடார்களுக்கு வித்ததாகக் குறிப்பிட் டிருக்கின்றது. அப்பத்திரம் பிறந்தது சாலிவாகன சகாப்தம், 1735-ம் வருடமெனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது நடக்கும் சாலிவாகன வருடம் 1847-ஆகும். அதனால் நாடார்கள் விலைக்கு வாங்கினது 112-வருடத்திற் முன்னென விளங்குகின்றது. அக்காலத்தில் விலைக்கு வாங்கின பெரியோர்களை "விருதுப்பட்டி-ஆதிமூர்த்தி நாடான், கருப்ப நாடான், அருப்புக்கோட்டை-பிச்சைகுட்டி நாடான், கருப்ப நாடான், பாலையம்பட்டி-பெருமாள் நாடான் இவர்கள் உள்ளிட்ட நாடார்களனைவோர்களுக்கும்" எனக் குறிப்பிட்டுள்ளது. இவற்றுல் 100-வருடத்திற்கு முன் "நாடான்" என்றும் "நாடார்கள்" என்றும் நாடாக்கள் என்றும், எங்குலப் பெரியோர்களுக்கு வழங்கப்பட்டு வந்ததைக் கண்டுகொள்ளலாம். இனி கிராமணி என்னும் பெயரைக் குறிப்பிடுவோம்,

திருப்போரூர் ஸ்ரீசுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்திற்கு 5-வதாக பட்டம்பெற்றுவந்த மடாதிபதி; ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தம்பிரான் அவர்கள் கிராமணிகளுக்கு எழுதிக் கொடுத்த உடன்படிக்கை வருமாறு:—

1820-ம் வருஷம் மேயீ 17உக்குச் சரியான தமிழ் விக்கிரமஞு வைகாசிமீ ஸ்ரீஅகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகராகிய திருப்போரூர் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமியார் கோவில தர்மகர்த்தாவாகிய முத்துக்குமார தம்பிரான் அவர்கள் பட்டிப்புலம் முத்து வெங்கட கிராமணிக்கும் புதுப்பாக்கம் குழந்தைகிராமணிக்கும் எழுதிக் கொடுத்த உடன்படிக்கை யென்னவென்றால்

ஷெயூர் கோயில் திருவாபரணம் கச்சிபீஸ்வர ஐயர் ஏர்ப்படுத்தின கணக்குபடிக்கு மதிப்பு ரூபாய் (11516-7-9)க்கு 1200 ரூபாய்க்காக சர்க்காரில் ஜாமீன் கேட்கிறபடியினாலே சுமார் (200) வருஷங்களுக்கு முன் திருப்போரூர் உங்கள் கிராம மிராஸை சுவாமிக்கு தர்மம் பண்ணிப் போட்டபடியினாலேயும் இப்போது உங்களையே சர்க்காரில் ஜாமீன் கொடுக்க கோரினபடிக்கு நீங்களே மேல் யெழுதிய திருவாபரணம் கணக்கு படிக்கு உங்களுக்கு வேண்டும்போது பார்வையிட்டுக் கொள்ளுகிறது. மேல் எழுதிய திருவாபரணம் வகையரா மாமூல் படிக்கு நம்ம வசத்திலே யிருக்கிறது அதிலே வித்தியாசம் வந்தால் நாமே உத்திரவாதம் பண்ணுகிறோம். இந்தப்படிக்கு சம்மத மனஸாக்ஷியில் யெழுதிக்கொடுத்த உடன்படிக்கை.

முத்துக்குமார தம்பிரான்.

சாக்ஷிகள்.

ஷெயூர் சிப்பு நயினு குருக்கள்

ஆலத்தூர் அப்பாகுட்டி முதலியார்

இவர்கள் அரிய சபாபதி பண்டாரம் யெழுதின உடன் படிக்கை.

இவ் வுடன்படிக்கைப் பத்திரம் சென்னைக்கு 40-மைல் தெற்கில் திருப்போரூர் சுப்பிரமணிய தேவஸ்தானம், சிதம்பரசுவாமி ஆதீன மடாதிபதி, 5-வது பட்டத்தாராகிய முத்துகுமார சுவாமி தம்பிரான் கிராமணிகளுக்கு எழுதிக்கொடுத்தது. இது ஒரு அகன்ற பனையோலையில் எழுதப்பட்டிருக்கிறது. அவ்வோலையில் கலெக்டர் இரும்பு முத்திரை போடப்பட்டிருக்கிறது. அவ்வுடன்படிக்கையில் "திருப்போரூர் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமியார் கோயில் தர்மகர்த்தாவாகிய முத்துக்குமார தம்பிரான் அவர்கள் பட்டிப்புலம் முத்து வெங்கட்ட கிராமணிக்கும், புதுப்பாக்கம் குழந்தை கிராமணிக்கும் எழுதிக்கொடுத்த உடன்படிக்கை" என வெழுதப்பட்டிருக்கிறது. இவ் வுடன்படிக்கை இங்கிலீஷ் 1820-ஞ் மேயீ 17உக்குச் சரியான தமிழ் விக்கிரமஞு வைகாசிமீ (தேதி செல்லரித்து விட்டது) ஆகும். கடைமுதல் வருஷம் இங்கிலீஷ் 1924 ஆமாண்டையின், இன்றைக்கு 104 வருஷத்திற்கு முன் எங்குலப் பெரியோர்களுக்கு "கிராமணி" என்னும் பட்டப்பெயர் வழங்கி வந்ததென வறிந்து கொள்ளலாம்.

அன்றியும் 1834-ம் வருஷம் அதாவது (90) தொண்ணூறு வருஷத்திற்கு முன் ஏற்பட்ட இராட்லர் தமிழ் இங்கிலீஷ் அகராதியிலும், 1862-ம் வருஷம் அதாவது இற்றைக்கு (62) அறுபத்திரண்டு வருஷத்திற்கு முன் ஏற்பட்ட உவின்ஸ்லோ தமிழ் இங்கிலீஷ் அகராதியிலும், நாடான் என்றாலும், கிராமணி என்றாலும் சாணாருக்குரிய பட்டப் பெயரெனக் கூறப்பட்டிருக்கின்றன. அதைப்போல் ஐயா! வர்மா பட்டத்தை வைத்துக்கொண்டாடும் அர்த்தனாரிப் பிள்ளையே! உங்கள் பள்ளி சாதிக்குரியதெனப் பகடிக்கனஞ்செய்யும் "நாயகர், வர்மா, பூபதி, ராஜா" என்னும் பட்டப்பெயர்களை, மேற்படி இராட்லராவது, உவின்ஸ்லோவாவது, அவர்களது அகராதிகளில் கூறியிருக்கின்றனர்களா? அல்லது மற்ற நூற்களிலாவது உங்கள் சாதிக்குரியதென கூறப்பட்டிருக்கிறதா? யாம் கிராமணி, நாடான் என்னும் பெயர்கள் எங்களுக்கே உரியதென விக்ரயப் பத்திரங்களாலும் உடன்படிக்கைகளாலும், அகராதிகளாலும் காட்டியதைப்போல் அந் நாயகர் முதலிய பெயர்கள் பள்ளிகளுக்கே யுரியதெனக் காட்டும் பார்ப்போம். ஒருக்கால் உங்களது பள்ளி அகராதியில் காணலாம். அதுவும் 1872-ம் வருஷத்தில் வெளிப்பட்ட சாதி

சங்கிரககாரத்தில் "நாயகர், பூபதி" என்னும் இருபட்டப் பெயர்கள்தான் திருடப்பட்டு வெளிப்பட்டது. 1912-ம் வருஷத்தில் வெளிப்பட்ட வன்னிவம்ஸ பிரகாசிகையில் "வர்மா" என்னும் பெயர் வெளிப்பட்டது. சின்னலட்சுமணப் புலவருக்கு ஏற்பட்ட "ராஜா" பட்டத்திற்கு என்னால் துணிபோ? இதுவரைக்கும் பல்ல அகராதிகளில் பள்ளிகளுக்குரியதெனக் குறிக்கப்படவில்லை. இத் திருட்டுப் பட்டத்தை வைத்துக்கொண்டு, வெட்கமில்லாமல் திண்டாடுகிறார். சரியான இரத்தம் அவர்கள் தேகத்தி லிருந்தால், அந்த காரியுமிழ்ந்த திருட்டுப் பட்டங்களை வைத்துக்கொண்டு வெளிப்படுவார்களா? "வெட்கங் கெட்டு வெளிப்பட்ட மூளிக்கு மூக்கோடே துக்கடி குதம்பாய், மூக்கோடே துக்கடி." என்பதைப்போல்லவா இருக்கிறது இப் பள்ளிப்புலவர்களது செய்கை. இத்தகையோர் ஆப்பைப் பிடுங்கி அகப்பட்டக் குரங்கைப்போல்; எம்மை கேள்வி கேட்க முற்பட்டு விட்டார். அக்கேள்வி தங்கள் பேரில் விழுமென அறியாது போனார்கள். யாம் சமாதானம் சொல்லிவிட்டோம். இனி யாம் திருப்பிக் கேட்கும் கேள்விகளுக்கு அவர் சமாதானஞ் சொல்லித் தீரவேண்டும்.

70, 80-வருஷத்திற்கு முன் இவர் குலத்து பெரியோர் ஸ்ரீ. செங்கல்வராய நாய்க்கர் என்பார் வைத்துவிட்டுப்போன தருமபண்டிலிருந்து கைத்தொழிற் கலாசாலை சென்னை வேப்பேரியில் நாளதும் நடந்து வருகின்றது. அத் தருமசாலைக்கு முன் இரண்டு போர்டுகள் போடப்பட்டுள்ளன. அப் போர்டுகளில் உள்ளவாறு இங்கெடுத் தெழுதுவாம்.

P. T. Lee. Chengalvaraya Naicker's
Charities.

P. T. Lee. Chengalvaraya Naicker's
Free Ayurvedic Dispensary.
Vepary.

பி. டி. லீ. செங்கல்வராய நாய்க்கருடைய
தருமங்கள்.

பி. டி. லீ. செங்கல்வராய நாய்க்கருடைய
தரும ஆயுர்வேதிக் வைத்திய சாலை.
வேப்பேரி.

இவர் லட்சாதிபதி. தங்கள் சாதியொழுங்கிலிருந்து மீறாது "நாய்க்கர்" பட்டத்தையே வைத்தார்கள். நமது அர்த்தனாரிசப் பிள்ளையாகிய பிட்சாதிபதி வெட்க மில்லாமல், பிட்சாதிபதிகளை எல்லாம் ஒன்று சேர்த்துக்கொண்டு குடிசை வீடுகளில் கூத்தாடுகின்றார்.

1862-ம் வருஷத்திலேற்பட்ட உவின்ஸ்லோ அகராதியில் "பள்ளி, படையாச்சி, வன்னியர்" என்னும் சாதிப்பெயர்களே பள்ளிசாதிகளுக்குரிய சாதிப்பெயர்களென கூறப்பட்டுள்ளது. இதற்கு பத்துவருஷத்திற்குப் பிறகே, அதாவது 1872-ம் வருஷத்திலேயே பள்ளிக்குல-குன்னம்-முனிசாமிப்பிள்ளை ஏற்பட்டு சாதிசங்கிரகசார நூலை ஏற்படுத்தி, இராஜவேஷம்போட கூச்சலிட ஆரம்பித்தார்கள். அதற்கு முன்னிருந்தே கூச்சல் போடுகிறதெனக் கூறின், 1862-ம் வருஷத்தில் வெளிப்பட்ட வின்ஸ்லோ அகராதி சாட்சி பகரவேண்டும். அப்படி சாட்சி பகராமல், அவ் வகராதி "பள்ளி, படையாச்சி, வன்னியன்" என்னும் பெயர்களே பள்ளி சாதியாருக் குரியதெனக் கூறி, "நாயகர், வர்மா, பூபதி, ராஜா" என்னும் பெயர்கள் பள்ளிக்குலத்திற்குக் கிடையாதெனக் காரியுமிழ்ந்து விட்டது. அந்தக் காரியுமிழ்ந்த திருட்டுப் பட்டப்பெயர்களை வெட்கமில்லாமல் வைத்துக் கொண்டு திண்டாடுகிறார்கள்.

அதோடு நிற்காமல் "உங்கள் முன்னோர்கள் தமிழரசர் அரசகாலத்தில் இப் பட்டங்களுடன் இருந்தார்களா?" என்கின்றார். இந்த அறியாமையிலும் அறியாமையே! அத் தமிழரசர் வம்ஸத்தில் உதித்தவர்கள் "நாடார்களும் கிராமணிகளும்" என்பதை இவ் வேட க்ஷத்திரியர் அறியாது போனதற்காக யாம் பெரிதும் வருந்துகின்றோம். அரசர்கள் பூர்வம் நாடன் என்றும், நாடான் என்றும், கிராமணி என்றும் வழங்கப்பட்டு வந்தனர். அதனுண்மையைத் தமிழ் நூல்களில் நாடன், நாடான் என்பதை

யும்; கிரந்தம் தெலுகு நூற்களில் கிராமணி என்பதையும் மலினமாகக் காணலாம். வடதேசத்திலுள்ள அரசர்கள் "பூமியான்" என்னும் பட்டப்பெயரை வைத்து வழங்கி வருவதைப் போல், இத் தென்தேசத்தரச வம்ஸத்தவர்களாகிய யாங்களும் கிராமணி, நாடன், நாடான் என்னும் பெயர்களைப் பெற்று வருகின்றோம். கொற்கையைச் சூழ்ந்த பிரதேசங்களில் "நிலமைக்காரர்" என வழங்கப்படுவதையும் அறியலாம். இவைகள் நாட்டையுடைய வரசரைக் குறிக்கும். அரசன், ராஜன், க்ஷத்திரியன் முதலியவைகளும் அந்த நாட்டையுடைய அரசரையே குறிக்கும். இவைகளெல்லாம் ஒரு பொருட் கொண்டவை. இந்த நாடன், நாடான் கிராமணி என்னும் பெயர்களை அரசர்களன்றி வேறு சாதியார் அக்காலத்தில் பெற்றிருந்ததாக நூற்பிரமாணங் கிடைத்தில. அவர்கள் வம்ஸத்திலுதித்த நாங்களும் அப்பெயர்களை தொன்றுதொட்டு அடைந்து வருகின்றோம்.

"Nadan:—Nadan, meaning ruler of a country; is a title of the Shanans."(Vide) Thurston's Castes and Tribes of Southern India. Vol. V, P. 134.

"நாடான் என்பதற்கு நாட்டுக் கரசன். சாணருக்குரிய பட்டப்பெயரா யிருக்கிறது."

"Gramani:--The title of some Shanans and of the headman of the Khatris." Thurston's Castes and Tribes of Southern India. Vol. II, P. 300.

"கிராமணி என்பது சாணருக்குரிய பட்டப் பெயர். காத்திரி வம்ஸத்துத் தலைவருக்கு முரியது." என்பதாகியால் இப்பெயர்கள் இச் சென்னை இராஜதானியில் எங்களுக்கன்றி, வேறு எச் சாதியாருக்குங் கிடைத்தில வென்பது அனுபவப் பிரமாணம். அதோடு உயர்ந்த அந்தஸ்தை யுடையன வென்பது மறியலாம். ஆகவே அந்தமிழரசர் வம்ஸத்திலுதித்தோர் நாடார்களும், கிராமணிகளுமென்பதே திர்ந்த முடிபாகுமென வறிவர்.

"Naik, Naickan, Naicker, Nayak or Nayakkan, has been returned, at recent times of Census, by the Tamil Pallis, Irulas, aud Vedans." (Vide) Thurston's Castes and Tribe s of Southern India. Vol. V, P. 139.

"நாய்க், நாய்க்கன், நாய்க்கர், நாயக் அல்லது நாயக்கன் என்னும் பெயர்கள் தற்காலம் நடந்த குடிமதிப்பு கணக்கில் தமிழ்பள்ளிகளுக்கும், இருளருக்கும், வேடருக்கும் உரியதெனப் பட்டிருக்கிறது." என்பதாம். இப்பகுதியால்நமது அர்த்தனாரீச நாய்க்கருக்குரிய நாய்க்கர் என்னும் பட்டப்பெயர் தாழ்ந்த அந்தஸ்துடையதும், பலசாதிகளுக் குரியதுமாமென வறிவர். மற்றக் கேள்விகளுக்குப் பின்னறிவிப்பாம்.

இனி அவர்கள் விடுத்த கேள்வியை யனுசரித்து; யாம் விடுக்கும் கேள்விகளுக்கு, அவர்கள் பதிலளிப்பார்களென வெதிர் பார்க்கின்றேன்.

(எமதுகேள்வி) பள்ளிகளுக்கு நாயகர், வர்மா, பூபதி, ராஜா முதலிய பட்டங்கள் எவ்வளவு காலமாய் உண்டு. மிகப் பழைய காலப் பட்டமென என்ன ஆதாரம் ஒப்புவிக்கின்றீர்? இதற்கு அர்த்தனாரீசப் பிள்ளை பதிலளிக்கக் கடவர்.

(பத்திராதிபர்.)

சேலம், க்ஷத்திரியன் பத்திராதிபருக்கோர்,

பகிரங்கக் கடிதம்.

(S. பக்கிரிசாமி படையாட்சி, டிரைவர், கெம்பர் 30, 40-வது வீதி, இரங்கூன்.)

ஐயா பத்திராதிபரே!

தற்போது நமது இந்தியாவிலுள்ள சகல மரபினரும் கல்வி, கைத்தொழில், வியாபாரம், விவஸாயம், ஆசாரசீர்திருத்தம் ஆகிய இவைகளில் முர்ப்போக்கடைய வேண்டி சங்கங்கள் ஸ்தாபகம்செய்து அவைகளின் மூலமாய் பர

பரப்புடன் பிரஸாரவேலை செய்துகொண்டு வருவது யாவருமறிந்த விஷயமே.

ஆனால், மேற்சொன்னவைகளின் சம்பந்தமாய் நமது பெரியோர்கள் என்னவேலை செய்துகொண்டிருக்கிறார்கள்? எவ்வித நிலைமையிலிருக்கிறார்களென்பதை வெளியிட வெட்கமாய் இருக்கிறதெனினும் உண்மையைமறைக்கமுடியவில்லை. நமது மரபினரில் கற்றறிந்த பெரியோர்கள் இருந்தும், அவர்கள் வீண்விஷயங்களிலும், விதண்டாவாதங்களிலும் தங்கள் கவனத்தை செலுத்திக்கொண்டு போகிறார்களேயொழிய நம்மவர்க் கின்றியமையாதனவற்றை இதுவரை புரிந்தார்களில்லை.

இந்தியாவிலும், முக்கியமாய் பர்மா, இலங்கை முதலிய குடியேற்ற நாடுகளில் வசிக்கும் லக்ஷக்கணக்கான நம் மரபினர்கள் காட்டுமிராண்டிகளைப்போல் உண்ணசோறும், உடுத்த உடையுமின்றி நண்டு, நத்தை, பன்றி முதலியவைகளை புசிப்பதையும். இழிதொழில்களை செய்வதையும், ஆண், பெண் இருபாலரும் மதுபானம் அருந்துவதையும், அதன் நிமித்தம் மானத்தை இழப்பதையும், பர்மாவில் சில பாகங்களில் நம்மனோர் முனிசிப்பல் தோட்டிவேலை செய்வதையும் உண்மைக் குலாபிமானி ஒருவன் பார்ப்பானாகில் அவன் கண்ணீர்விட்டழுகாமல் இருக்கமாட்டான்.

ஆகவே, உலகில் நம்மரபினர்கள் இவ்வித அநாச்சாரத்தில் மூழ்கிக் கிடக்கும்போது படித்த இரண்டொருவர் சேலத்திலிருந்துகொண்டு நான் க்ஷத்திரியன், நான் க்ஷத்திரியனென்று உண்மைக்கு விரோதமாய் தமுக்கடிப்பதைப்பார்த்தால் வெட்கமும் துக்கமுமாய் இருக்கிறது. நம்மனோரிடத்தில் க்ஷத்திரிய இரத்தம், வீரம், ஆசாரம் முதலியவைகள் சிறிதளவேனும் இல்லையாகையால் உண்மையில் நாம் க்ஷத்திரியரல்ல. அந்தணர்கள் நமது மரபைப்பற்றி புத்தகங்களில் அப்படி எழுதியுள்ளார்கள். இப்படி எழுதி இருக்கிறார்களென்று வீண்பெருமை பேசி க்ஷத்திரியனாகப் பார்ப்பது பெருத்த கேவலமாகும். நமது நாட்டையும், அதிலுள்ள ஜாதிகளையும் பார்ப்பனர்கள் முன்னும் கெடுத்தார்கள். பின்னும் கெடுத்தார்கள், இன்னும் கெடுக்கப் பார்க்கிறார்கள். தற்காலப் பார்ப்பனர்கள் எழுதும் புத்தகங்களெல்லாம் அவர்களின் வயிற்றுப் பிழைப்புக்காகவேயொழிய வேறொன்றுமில்லை.

எனவே, தற்போது நடைபெறும் துர்வாதம் இக்காலத்திற்கேற்றதல்ல வாகையால் அதைவிட்டொழிந்து நம்மனோரின் நலத்தைக்கருதி வேலைசெய்வதேசாலச்சிறந்ததாகும். 18-9-24. என ஒரு படையாட்சியார் எழுதுகிறார்.

ம-ள-ள-ஸ்ரீ. த. விஜய துரைசாமி கிராமணியார் அவர்களுக்கு, ஐயா இத்துடன் வரும் வியாசத்தை தயவுசெய்து தங்கள் க்ஷத்திரிய மித்திரனில வெளியிட வேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன். இவ்வியாசத்தை முன்னமே சேலம், க்ஷத்திரியனுக்கு எழுதியிருந்தேன். நாளது வரை பிரசுரஞ் செய்ததாக தெரியவில்லை. எழுதிக்கேட்டும் பதில் இல்லை. அதன் அதிபருக்கு பிரசுரிக்க பிரியமில்லைபோலும். ஆகவே, இதை தங்களுக்கும் அனுப்பலாயிற்று வந்தனம்.

குறிப்பு:—ஐயா! ஸ்ரீபக்கிரிசாமி படையாட்சியாரே! இதற்கு நமது அர்த்தனாரிசப் பிள்ளைதான் சமாதானங் கூறவேண்டும். அன்றியும், அவர் சேலத்திலுள்ள சேர்வராய மலையை அண்ணார்ந்து பார்ப்பரேல் நன்குணர்வர்.

(பத்திராதிபர்.)

அமிழ்தினு மினிய தமிழ் மொழியின் மாண்பு.

(ஏ. இராஜநாயக நாடார், மாவிடுபண்ணை.)

(முன்றொடர்ச்சி.)

"குட்டுதற்கோ பிள்ளைப்பாண் டியனிங் கில்லை
குறும்பியள வாக்காதைக் குடைந்து தோண்டி
எட்டிமைட் டறுப்பதற்கோ வில்லி யில்லை
இரண்டொன்று முடிந்து தலையிறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்த னில்லை
விளையாட்டாக் கவிகடமை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைக ளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரிய லாமே."

பன்னலம் பொருந்திய சித்தலைச் சாத்தனர் சரியிலாத செய்யுட்களைக் கேட்டவுடன் "அந்தோ! இந்த வழுவிலுற்ற செய்யுளைக் கேட்க நேர்ந்ததே" என்று வயிற்றெரிச்சலுடன் திராவிசௌமுடன் குட்டிக் கொள்வாராம். அதனால் அவர் தலையில் இரணமுண்டாகி எப்போதும் சீழ் ஒழுகிக்கொண்டிருக்கும். இக்காரணம் பற்றி "சீத்தலைச் சாத்தனர்" என்ற பெயர் ஏற்பட்டதாகச் சொல்வர்.

தப்பான ஆற்றலைக் கண்ட வித்துவான்கள் ஓடோடியும் போய்க் கிழித்தெறிவாராம். இத்தகைய கண்டிப்பான ஏற்பாடு இருந்தமையால் எத்தனை வருஷங்களானாலும் கசடறக் கற்றே புலவர்களென வெளிப்படுவது சகஜமாயிருந்தது. ஆகையால் அவர்கள் தெய்வீக நூற்கள் வெளியிட்டனர். சகலகலபாடும் வித்துவான்கள் மலைத்தேன்போல் மலிந்து காணப்பட்டனர். விநைத்திற்றோர் கவி பாடும் திறமையாளர் நிறைந்திருந்தனர். விக்கவில்லையோ? ஆசுகவி பாடும் திறம்பெற்ற வித்துவான்களும், சித்திரக்கவி பாடும் சீரார்களும், வாது இக்கால் முழு காலத்தில் அரிகண்டம் எமகண்டம் முதலியவைகளைக் கொண்டு கேட்டவர் வாயடங்க சாமர்த்தியமாகக் கவி பொழிவார்கள். அற்புதமன்றோ? அஷ்டாவதானம், சோடசாவதானம், சதாவதானம் முதலியவற்றையெல்லாஞ் செய்து தெய்வீகப்புலவர் எனத் தோன்றினர். அவர்கள் வாக்குப் பலித்தது. அவர் கவியில் சொன்னவைகளே நடந்தேறியது. அவர்கள் மனமும் பரிசுத்தமாகக் காணப்பட்டது. தெய்வீகமே அவர்கள் மனதில் சதா குடிகொண்டிருந்தது. அவர்கள் செய்த மகிமையைச் சொல்ல முடியுமோ? காயாத பனையைப் பக்குக்கு முன்று பழுத்தா என்று சொன்ன ஔவை வாக்குச் செல்லவில்லையோ? அப்பழுத்த காலத்தில் கொட்டிக்கிழங்கு கொணர்ந்த வெகுநாளு சொல்ல அன்னமே சான்றாகவில்லையோ? குதிரையை மானவும் மீனவும் செய்தது கம்பர் வாக்கன்றோ? கம்பன் பனைத்தலை விழுந்த மீனினம் திரும்பவும் கடலில் சென்று போடச் செய்தது வள்ளுவர் வாக்கன்றோ? பூதத்தின் வாய்ப்பட்டு உயிர் தாக்கும் நிலையில் திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரன், வேலவனால் காக்கப்படவில்லையோ? இவ்வளவும் கூற வந்தது மித்திரன் இப்பொழுது இடங்கொடாதலின் தமிழின் மகிமையை வரையும்போது எழுதுவதாம்.

முற்காலத்துப் புலவர்கள் வருவதை அறிந்த அரசர்கள் தங்கப் பல்லக்குடன் எதிர்கொண்டழைப்பார்கள். முற்காலத்தில் வித்துவான்களைக் கண்ட சத்திரத்தாரும், அவர்களுக்குச் செய்யவேண்டிய மகிமைகளைச் செய்துவிட்டே மறுதொழில் செய்வர். என்ன அருமை!

இக்காலத்தில் தமிழ் வித்துவான்களை எண்ணிப்பார்க்கும் தமிழ் சிரோமணிகளின் எண்ணம் கைவிரலுக்கு என்றோ? காலக்கொடுமையோ? பண்டைக் காலத்துப் பயிற்சி முறையையும், வித்துவான்களின் மாண்பையும் வெளியிட்டோம். இனிமேல் இக்காலத்துப் பயிற்சி முறையைப்பற்றிப் பேச எமக்கு நாவெழவில்லை. ஒட்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியைத் துரத்தியதுபோல் தமிழின் ஸ்தானத்தில் ஆங்கிலம் குடிகொண்டு தமிழ்த் தாய்க்குச் செய்யவேண்டிய கைங்கரியமெல்லாம் ஆங்கிலத்திற்கே செய்யப்படுகிறது. இது எப்படியிருக்கிறதென்றால் தாயை அறியாத ஓர் குழந்தை ஓர் பாத்திரத்தைக் கண்டு அம்மாவென்று கூறும் கூற்றுக்கு உவமிக்கலாம். கலாசாலைக்குச் சென்றால் தமிழ் நாதத்திற்குப் பதிலாக ஆங்கிலநாதமே கேட்கிறது. சில கலாசாலையில் தலைமை உபாத்தியாயர் இறுமாப்புடன் தமிழ்ப் பேசுபவர்களுக்கு அபராதம் விதிக்கின்றனர். இதை நாமே கண்ணால் கண்டிருக்கிறோம். தனது தாய் தன்னைத் தாலாட்டி வளர்த்து, பாலோடு ஊட்டினதும் எம்மொழியில் என அவர் அறியார்போலும்! தமிழில் பேசிக்கொண்டிருக்கிறவனும் தனது ஆசிரியரைக் கண்ட மயக்கத்தால் இடிவிழுந்த நாகம்போல் பயந்து (த. பி. வி. டி.) எனப் பாடிவிடுகிறான் என்னே! தமிழுக்குநேர்ந்தகதி! சர்க்கார் தமிழ் பாஷை விஷயத்தில் கையாண்டிருக்கிற முறையோ சொல்லத்தரமல்ல. அந்நியர்களாகிய

அவர்களுக்கு அதைப்பற்றிக் கவலை என்ன? தற்போது கல்வி மந்திரியான கனம் பத்ரோவின் சீர்திருத்தப்பிரகாரம் நம்மவர்களோ கல்வி ஆலோசனைச் சபையில் (Senate) பீடமையைத்தும், ஆங்கிலமே அவர்கள் கமலவதனங்களில் பரிமளிக்க வேண்டும் போலும். இந்நாள்வரை இவர்கள் தமிழ் விருத்திக்கு ஏதாவது செய்தனரா? அல்ல. ஆங்கிலத்தை விருத்தி செய்வதற்கு இவர்கள் உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தஞ்செய்து கொண்டிருக்கிறார்கள். அநேக பிரதிநிதிகள் நம் தமிழ்நாட்டிலிருந்து சென்றிருந்தும் பாராமுகமாயிருப்பது எதற்கு இலக்கண இலக்கியங்களின் போதுமான பயிர்ச்சியின்மையாலும்; தமிழின் இனிமை வாய்ப்படாமையே காரணம்போலும். காருண்ய கவர்ண்மெண்டார்கள் சுதந்தரம் கொடுத்தும், அச்சுதந்தரத்தை அநுபவிக்கத் தகுதியற்றவர்களானோம். கல்விச்சபை முழுவதும் நம் பிரதிநிதிகளே வீற்றிருந்தும் பயனென்னை?

நாம் முந்தையமாதத்தில் தமிழின் பண்டையக்காலத்துப் பயிர்ச்சி முறையையும், தற்காலப் பயிர்ச்சி முறையின் சீர்கேட்டைத் தெளிவாகப் பார்த்தோம். இப்பொழுது பயிர்ச்சி முறையின் எஞ்சியவற்றை ஓர் சிறிது ஆராய்ந்து, தமிழின் இனிமையான இரண்டொரு வர்ணனைகளைச் சிறிது வரைவாம்.

தமிழில் பூரணபாண்டித்யமுள்ள பண்டித சிகாமணிகளை நாம் ஆதரித்து நமது வாக்குகளை நம் தமிழ் மொழியின் பொருட்டுப் பாடுபடும் உத்தமச் செல்வர்களுக்குக் கொடுத்து தமிழ் விருத்திக்காகப் பாடுபடுமாறு தூண்டவேண்டும். கல்விச்சபைக்கு தெரிந்தெடுக்கும் அதற்குரிய வாக்காளர்கள் தமிழின் நலத்தைக் கோரும் தாதைகளுக்கே தமது வாக்குகளையும் கொடுக்கவேண்டும். இக்காரணத்தினாலும் தமிழுக்கு விமோசனகாலம் பிறக்கலாம்.

(இன்னும் வரும்)

இட்டமொழி, உயர்தர பாடசாலையின் போஷகர்,

ஸ்ரீமான், எ. வி. யோசேப்பு நாடாரவர்களின்,

ஜயப்பிரதாபத்தை யுணர்த்தும்,

வெற்றிப் பத்து.

(செய்யுளாசிரியன், ஜே. ஜி. சுந்தரம், இட்டமொழி.)

காப்பு.

“நண்ணினர் வார்வினை யைபுற நாடொறுங்
கண்ணொடு கருத்துளான் கழலிணை சரணே.”

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

1. மட்டார்ந்த மலர்வேய்ந்த வலர்மார்ப னனைங்கணென்ன வாழ்த்து நீரான்
சிட்டார்ந்த புயவானன் கடிகமழ்தார் புனைவீரன் காசிக்கெல்லாம்
பட்டார்ந்த பெருங்கீர்த்திப் பிரவாக வெள்ளத்திற் படிந்த பெயரோ
விட்டார்ந்த வளர்நிதிய நெறிமுறையி னேந்தியநல் ஏ. வி. யோசேப்

2. போகூழின் வயம்படவுந் தன்னறமு மறமென்றே புகலு மாக்கட்
கூகூவென் கூவிவிகொண் டிகழ்ந்தருமல் லெண்ணாக்க ணொன்று நிற்ப
வாகூழின் வயம்படவே யம்மறமு மறமெனவே யலகின் மாந்த
ராகூவென் றுப்பரிக்க வடையலுழ திறங்கூறும் வெற்றிப் பத்தே

3. பொன்பூத்த வாணிபஞ்செய் புனிதனானான் புகழ்பெருகு பொற்பின் மிக்கான்
கொன்பூத்த நன்னடைக்கைப் பயனாகப் பாரிடமுங் கொள்ளா தாக
இன்பூத்த விருநிதியம் பெருகுதுறைப் பரந்துசெலப் பாரின் வேந்தர்
மின்பூத்த சொன்னிறைந்த தகைமையொடு தழைத்தினிது வாழ்வா னன்றே

4. வஞ்சமன மித்துருக்கட் சத்துருக்க ளாதியோர்தம் வகையி னானே
நஞ்சுமிகு சபடுசெய்து நடாத்தினான்றன் றொழிலென்று நவிலா தாகுந்
துஞ்சலிலாப் பொய்வழக்குத் தொடுத்தனரா லென்செய்வ தென்று தேம்பிக்
கஞ்சமலர் மனங்கவலக் கடுந்தொழிலார் வெள்ளமென வெழுந்திட் டாரே

5. கள்ளமுகர் வைத்திட்டான் கட்டைகளை யேற்றிட்டான் கனத்த லாபங்
கொள்ளையெனக் கொண்டேதான் குபேரனென நுவன்றிட்டான் குற்றமென்றே
வெள்ளைமனப் பெரியோரும் பேதுறுமா றப்புல்லோர் புகலா நிற்க
வெள்ளினுணெய் போன்றிருப்பா னுள்ளிருந்த வுண்மைதனை யேற்றச் செய்தான்

6. வினைவலியுந் தன்வலியுந் துணைவலியு மாறினதுந் தூக்கி யோர்ந்தே
நினைவினல் விறைபொதிந்து நீக்கரிய வாக்கமெனுந் தறிபு நிறுவி
கனைசமூழ்க்காற் குலவீர னுண்மையெனுந் தெப்பமேறித் திரையூ டாடி
யினைவின்றிக் கரைசேர்ந்தே யெழில்விளங்க வினையின்றிப் பொலிந்தான் மாதோ

7. சத்தியமே ஜயந்தருமச் சத்தியமே தலைகாக்கு மிதற்கு மாறுஞ்
சித்திரங்க டலைபடுக்குந் தலைகவிழ்க்குந் தன்மையிது தவறா தாகப்
புத்தியிலாப் புல்லோரின் பொய்யுரைகட் கட்டின்றிக் கவிழ்ந்த தன்றே
தத்தளித்த சத்தியந்தான் றலைநடுங்கா முறைசெய்தான் ஏ. வி. யோசேப்

8. பொய்ம் மாற்றம் பறந்தனவே பொய்க்கோளு மொழிந்தனவே புகரில் வாய்மை
யுய்தலிலா வகைமுடிப்பார் வகையெங்கே முடிவென்னே வொன்றே யாகப்
பைய்யெனவே குதித்தோடிப் பயமின்றித் திகழ்ந்ததுகாண் கொண்டார்ப் பேறு
மெய்யெனவே நிலைநின்ற மெய்யதனை மெய்யுடையோர் மெச்சிப் பேச

9. கலைபயின்ற வடிவழக னருங்குணத்தன் சட்டுரைய னில்லா வாழ்க்கை
நிலைபயின்ற வுயிர்க்கெல்லாந் துணையெனவும் பிணையெனவும் பொருந்து நீரா
னலைபயின்ற கடலுலகி னலந்திகழ் நெடும்போது மன்னி வாழ்ந்து
தலைபயின்ற பேறுடனே சீர்பயின்ற திருவினொடுந் தழைத்து வாழ்க

10. தேனொழுகு தொடைமார்பன் பாலொழுகு கனிவாயன் பேரில் வல்ல
கூனொழுகு விற்பயிலுஞ் சான்றோர்தங் குலமுடிபாய்க் குறைக டீர்த்து
வானொழுகு கற்பகந்தான் பூவுலகின் முளைத்ததெனப் புகழு மாறு
மீனொழுகு வானுலக வேந்தனென வியனுலகில் வாழ்க மாதோ

தனியன்

தரவு கொச்சகக் கலிப்பா.

பாமாலை பதமடையப் புகழ்மாது யோசேப்பைத்
தேமாலை தரித்தனளே சிறப்பினிதற் கீடுண்டோ
வாமாலை யணியவுநல் வயமாலை பெறுதற்குஞ்
சீமாலை வாய்மையே சிறக்கணிவாய் மனனே காண்.

——(o)——